Free Circulation

வெற்றிமணி வெளியீடு 27

# சிவத் தமிழ்

2015



பிரதம ஆசிரியர்:

கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

# ஒரு நொடிக்குள் மனம் மாறலாம்!



## கர்ணனின் இடக்கை தானம் குறித்த கதை!

கர்ணன், பாண்டவர்களின் மூத்த அண்ணன், துரியோதனின் உயிர் தோழன், கொடை வள்ளல், குருஷேத்திரம் போரில் நட்புக்காக உயிர் துறந்த தியாகி. அதுவும் கண்ணனின் சூழ்ச்சி முடிச்சுகளால் வீழ்த்தப்பட்டவன்.

சரித்திரத்தில் தர்மத்திற்கு பெயர் போனவன். யாரேனும் அதிகமாக கொடை செய்தாலோ அல்லது ஒரு ரூபாய் அதிகம் பிச்சை போட்டால் கூட, "ஆமா, இவன் பெரிய கர்ணன், கர்ண பரம்பரை.." என்று தான் பல நூற்றாண்டுகளாக நாம் கூறி வருகிறோம்.

மகாபாரதத்தில் துரியோதனன் பக்கம் நின்று சண்டையிட்டும் மற்ற அனைவர்களையும் விட அதிக நற்பெயர் கொண்டவனாக திகழ்ந்தவன் கர்ணன். இனி, கர்ணனின் இடக்கை தானம் குறித்த சுவாரஸ்ய கதை குறித்துக் காணலாம்.

தலையெழு வள்ளல்களில் முதல்வன் வரலாற்றில் சிறந்த வள்ளகளில் முதன்மை யில் இருப்பவன் கர்ணன். வந்தவருக்கு இல்லை என்று கூறாத இவனது குணமும், போர்களத்தில் தனது உயிரைக் காத்து வைத்திருந்த தான பண்பினால் கிடைத்த அருளையும் கூட தானமாய் கொடுத்த இவனது பண்பும் தான் அதற்கு காரணம்.

எண்ணெய் நீராட்டு ஒரு நாள் கர்ணன் எண்ணெய் நீராட்டுக்காகத் தங்கக் கிண்ணத் தில் எண்ணெய் எடுத்துத் தன் உடலில் தடவிக் கொண்டிருந்தான். அப்போது ஓர் இரவலன் வந்தான்.

பிக்ஷாம்தேகி அந்த இரவலன் கர்ணனிடம் பிக்க்ஷாம்தேகி என்றி (பிச்சையிடுக) இரவல் வேண்டி வந்து நின்றான்.

தங்க கிண்ணம் தர்மம் உடனே தனது இடக்கை பக்கமாக இருந்த தங்க கிண்ணத் தை தனது இடக் கையாலையே எடுத்து, இரவலனுக்கு அளித்துவிட்டான் கர்ணன். இரவலனும் மகிழ்வுடன் சென்றான்.

அருகிலிருந்த நண்பர் அப்போது அருகிலிருந்த நண்பர், கர்ணா, இடக் கையால் தானம் தரலாகாது என்று அறநூல் கூறுகின்றதே. தாங்கள் செய்தது அறநூலுக்கு எதிரானது அல்லவா? வலக் கையால் தானே தர்மம் செய்தல் வேண்டும் என்று கூறினார்.

கர்ணனின் பதில் நண்பரே, அந்த அறநூலை நான் நன்கு படித்தவன்.

ஆனால், மனித மனம் நிலையானது அல்ல. நொடிக்கு நொடி மாறிக்கொண்டே இருக்கும்.

இடக்கை அருகே இருக்கும் தங்க கிண்ணத் தை வலக் கையால் எடுக்க சில நொடிகள் ஆகும்.

அதனால் தான் இடக் கையில் கொடுத்தேன் என்றான்.

கொடை தடுமாறிப் போகலாம் மற்றும் அந்த சில நொடிகளில் மனம் மாறிட வாய்ப்புகள் இருக்கின்றன.

இவ்வளவு உயர்ந்த தங்க கிண்ணத்தை தானம் தர மனம் மறுக்கலாம்.

அதனால் தான் இடக் கையில் உடனே தானம் செய்தேன் என்று இடக் கையில் தானம் செய்ததற்கு காரணம் கூறினான் கர்ணன்.

நண்பர் வியப்படைந்தார் இதைக் கேட்ட கர்ணனின் நண்பர்," கர்ணா, உனது தானம், கொடை பண்பு அந்த அறநூல்களையும் விஞ்சிவிட்டது.

உன்னை விட ஒருவன் தானத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்க முடியாது என்று வாழ்த்திக் கூறினார்.

# சிவத் தமிழ்

அன்பே சிவம்! சிவமே தமிழ்!!

மலர் 11 2015 இதழ் 27



ஆரம்பம் 2004



பிரதம ஆசிரியர்
கலைஞானமணி
**கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A**

Tel.02351 458862
e.mail. vettimaniy@hotmail.com

உதவி ஆசிரியர்
ஆன்மீகத்தென்றல்
**த.புவனேந்திரன்**

வெளியீடு
**Vettimaniy Ltd**

கௌரவ ஆசிரியர்
**கலாநிதி கவிஞர் வி.கந்தவனம்**

யேர்மனி
Brinker Höhe 13
58507 Lüdenscheid - Germany
Tel.02351 458862

இலங்கை
திருமதி.வலன்ரீனா இளங்கோவன்.M.A
தபால்பெட்டி ஒழுங்கை
பலாலிவீதி
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்
யாழ்ப்பாணம்


# இனிய சங்கமம்



## தெரியாமல் நன்மை செய்தாலும் கலங்கும் மனசு!

**மு.க.சு.சிவகுமாரன்**

இன்று தீமையைச்செய்து விட்டு தீங்குசெய்து விட்டோமே என வருந்துபவர்களை விட, நன்மையைச் செய்து விட்டு வீட்டுக்கு வந்து வருந்துபவர்கள்தான் உலகில் அதிகமாக உள்ளனர்.

தீமையைச் செய்து விட்டு அட அதற்கு நாம் என்செய்வது, ஆண்டவன் நமதுவடிவில் அவர்களைத் தண்டித்துள்ளான். அல்லது அவர்கள் வினைப்பயன் அப்பாடியக இருக்கலாம். தம்மால் தீமை அவர்களுக்கு ஏற்பட்டது என்று எண்ணி தமது நின்மதியைக் குலைக்கமாட்டார்கள்.


ஆனால் நன்மை செய்துவிட்டு அட இது இவர்களுக்கச் செய்திருக்க வேண்டுமா? அட அதிகமாகவே செய்துவிட்டோமோ? ஏன் நாம் செய்தோம்! என மனம் புழுங்கியபடியே இருக்கும். நன்மைக்கு மட்டும் அந்த ஆண்டவன் நமது வடிவில் வந்து செய்தார் என்று கனவும் காணமாட்டோம்.

வலது கைகாடுப்பதை இடது கை அறியாமல் கர்ணன் கொடுப்பதாக அவனது கொடையயின் சிறப்பைச் சொல்வார்கள். அதன் அர்த்தம் தான் அறியாமல் என்று அல்ல! மற்றவர்கள் அறியாமல் அதாவது பிறர் அறிய மற்றவர்கள் பெருமைகொள்ள அந்தப் புகழை நோக்கியதாக கொடை இருக்கலாகது என்பதே பொருள்.

அதிகமாக பிச்சைக்காரர்கள் பிச்சைாக்காரர்களுடன் நின்று பிச்சை எடுப்பதில்லை. காரணம் பணக்காரனுக்கு முன்பு தான் சில பணக்கார்கள் அவர்கள் பார்க்கப் பிச்சை போடுவான். அதுவும் அதிகமாகப் போடுவான். பணக்காரர்களது மனநிலையை நன்கு படித்தவர்கள் இந்தப் பிச்சைக்காரர்கள்.

நம்மில் பலருக்கு இப்படியான சந்தர்ப்பம் வந்திருக்கலாம். நன்கொடைக்கு வருபவர்களுக்கு, அள்ளிக் கொடுத்துவிட்டு ( முகத்திற்காக) பின் முகம் மறைந்த பின், அட அதிகமாகக் கொடுத்து விட்டோமோ?

தொடர்ச்சி 4ம் பக்கம்.




அல்லது விடுமுறைக்கு ஊருக்கசென்று அட இனபந்துகளுக்கு நீங்கள் அதிகமாகவே அள்ளிக் கொடுத்திட்டீர்கள்.
கொஞ்சம் எண்ணிப் பாரத்தீர்களா? நாம் இங்கு அவர்களைவிடக் கீழாக அல்லவா இருக்கின் றோம்.
இப்படி தெரிந்து செய்த நன்மைபற்றியே கலங்கி நிற்கின்றது மனசு.
எனவே கொடுங்கள் கொடுப்பதற்குமுன் சிந்தித்துவிட்டுக் கொடுங்கள். கொடுத்துவி ட்டீர்கள் என்றால் அதனை மறந்துவிடுங்கள். அது என்றோ ஒரு நாள் எதோ ஒரு வடிவில் உங்களுக்கு திரும்பவரும். தீமையைச் செய்து விட்டு அது அவர்கள் விதி என்று நம்பும் மனசு, ஏதோ ஒருவடிவில் நன்மை திரும்பவரும் என்ற விதியையும் நம்பித்தான் ஆகவேண்டும்.

தெரிந்து செய்யும் நன்மையே இப்படி என்றால்? தெரியாமல் நன்மை செய்துவிட்டால் எப்படி இருக்கும். நமது குணம் தெரிந்த ஒரு பிரபலகடை நிறுவனம் இப்படிச் செய்துள்ளது.

யேர்மனியில் (Lidl) லிடில் கடை யாவருக்கும் தெரியும்.
அங்கு வாங்கும் பிலாஸ்ரிக் போத்தல்களை (தண்ணீர், யூஸ்போத்தல்) பாவனைக்குபின் திரும்பிக்கொடுத்தால் போத்தலுக்கு 25 சென்ஸ் கிடைக்கும். அதற்கு என பிரத்தி யேக மாக போத்தல் போட (தன்னியக்க இயந் திரம் உண்டு).

அதன் வாயிலில் போத்தலை நுளைத்து விட் டால் அது போத்தலை உள் இழுத்துவிட்டு அதற்குரிய பணம் எவ்வளவு என்று காட்டும். நாம் அதில் உள்ள ஒரு பட்டினை அமத் தினால் அதற்குரிய ஒரு பில்போல் அச்சடித்து தரும். அதனை கடையில் ( லிடி லில்) கொடுத் தால் காசு தருவார்கள். சிலசமயங் களில் 15 யூரோவிற்கு மேலும் வரும்.

இதில் முக்கியமானது என்ன வென்றால் நீங்கள் இந்தப்பணத்தை எடுக்காது அப்படியே அதனை உலகில்உள்ள வறிய மக்களுக்கு நன்கொடையாகவும் வழங்க முடியும்.

ஆனால் அதனை அறியாது எங்கோ பாரத்துக் கொண்டு காசு மீளப்பெறும் பட்டினை அமைத் துவதற்குப் பதிலாக, காசை நன் கொடைக் குரிய பட்டினை அமத்தி விடாமல் இருக்க, அந்த நன்கொடை பட்டினை, நமது விரல் தெரியாமல் அமத்துதை தவிர்க்க, ஒரு கவசம் உண்டு.
அது ஒரு பாதிக்குடைபோல் அந்த பட்டினை முன்பக்கமா மறைத்து இருக்கும். எனவே நீங்கள் உண்மையில் போத்தலுக்குரிய பணத் தை வறிவர்களுக்கு நன்கொடையாக வழங்க விரும்பினால் மட்டும், உங்கள் விரலை அந்த பாதுகாப்பு கவசத்திற்கு உள்பக்கமாக விட்டு சிரமத்தின் மத்தியில் அந்த பட்டினை அமத்தி அந்த நன்கொடையை வழங்கலாம்.

இவ்வளவு தூரம் நீங்கள் தவறுதலாக விரும் பாமல் நன்கொடை வழங்குவதை தவிர்ப்பதற் கான முன்னெச்சரிக்கையாக அந்தக்கவசம் விளங்குகின்றது.
தவறுதலாக அமத்தக்கூடியதாக இருப்பின் நீங்கள் அதனை அமத்திவிட்டு நன்மை செய்து விட்டேனே என்று புலம்பாமல் இருப் பதற்காக அந்தக்கடை நிறுவனம் மக்கள் மனம் அறிந்து செய்துள்ளது.
உண்மைதான் கொடுக்கும் போது சிந்தித்துக் கொடுங்கள். கொடுத்தபின் உங்கள் சிந்த னையை அதன் மேல் சிதறவிட்டு அமைதி இழக்காதீர்கள். நன்மை செய்யுங்கள் அதனை இன்றே செய்யுங்கள் தெரிந்து மகிழ்வோடு செய்யுங்கள்.


இதனை விதி என்றும், கொள்ளலாம் வாழ்க்கை விதிமுறை என்றும் கொள்ளலாம்.

**பி.குறிப்பு: தெரிந்தும் தெரியாமலும் தர்மம் செய்தவர்களது பணம் கடந்த 4 ஆண்டில் 5 மில்லியன் யூரோவாகும்.**

# அன்னையின் அருட்சிறப்பும் அழகுக்கோலமும்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்





நாம் வாழும் நடைமுறை உலகிலே அன்புக்கு உதாரணமாக அமைபவள் தாய். சில புறநடைகளாகவுள்ள தாய்மாரை விடுத்து நோக்கம்போது எல்லாத் தாய் மாருமே அன்புடையவர்கள் அருட்கொழுந் தோடிய உணர்வுடையவர்கள்.

இவர்களுடைய அன்புநிலை இப்படியிருக் குமானால், இவர்கள் யாவர்க்கும் மேலான இறை வியாகிய எம் அன்னையின் அன்பும் அருளும் எத்தகையனவாயிருக்கும்?

**மாரியென்றால் மழைபொழியும் தாயே தாயே எங்கள்**
**தேவியென்றால் தேன்சொரியும் தாயே தாயே**

என்று உடுக்கடித்துப் பாடுவார்கள். மாரியைத் தருபவள் மாரியம்மன். இந்த உலக மக்களிலே அன்புடையவளாக மாரியினைத் தந்து சூட்டினைத் தணிப் பதுடன் வளத்தினையும் தருபவள் அவள். பரம்பொருளைத் தலைவனாக, தாயாக, குழந்தையாக, தோழனாகப் பல்வேறு வடிவில் அடியார்கள் பக்திசெய்துள்ளார்கள்.

இப்பக்தி நெறிகளுள் மிக நெருக்கமாக உள்ளங்கலந்து உறவுகொண்டாடத் தாயாகக் கருதி பக்திசெய்யும் நெறியே ஏற்றதாக அமைந்தது.

முழுமையான அன்பு, முழுமையான பொறுமை, முழுமையான தன்னல மறுப்பு, முழுமையான மன்னிக்கும் சுபாவம் என்ப வற்றை நாம் தாய்மையிலேயே காண முடியும்.

"நம்மையுமோர் பொருளாக்கி நாய் சிவிகை ஏற்றிவைத்த அம்மை" என மணிவாசகப் பெருமான் கூறுகின்றார். நாய் சிவிகை ஏற்றுவிக்கும் உள்ளம் தாய்மைக்கே உண்டு.

இதனாலேயே தாய்த்தெய்வ வழிபாடு அல்லது சக்தி வழிபாடு உலகில் பல இன மக்களிடையே காணப்படுகின்றது. வேடர், இடையர், உழவர் என ஆதிகால மக்கள் நாகரிக படிமலர்ச்சி பெற்றபோது விவசாயத்திலே ஈடுபட்ட பெண்கள் சமூகத்திலே முக்கியத்தவம் பெறலாயினர். தாய்வழிச் சமூக அமைப்பும் தோன்றலாயிற்று.

இக்கால கட்டத்திலேயே பெண்தெய்வ வழிபாடும் தோன்றி வளர்ந்திருக்கலாம். சக்தி வணக்கம் காலத்தால் மிக முற்பட்டதெனக் கூறுவர். கி.மு. 2000 ஆண்டளவிலே ஆரியர் இந்தியாவக்குள் வந்தனர். அதன் முன்னர் வட இந்தியாவில் சிந்து வெளியிலே வாழ்ந்த மக்கள் திராவிடர் என அறிஞர் அபிப்பிராயப்படுகின்றனர். திராவிட மொழி பேசுவோரிடையே பண்டைக் காலந்தொடக்கம் பெண்தெய்வ வழிபாடு இருந்துவந்துள்ளது.

கொற்றவை, காளி, நீலி, பிலிமக்கா, கடவா, ஒக்கரை, கங்கா, கொல்லா, அத்தி, புடுபுடுக்கி எனப் பல பெயர்களுடைய தாய்த் தெய்வங்கள் திராவிடர்களாலே வணங்கப்பட்டு வந்தன. இன்றைக்கும் தென்னிந்தியத் திராவிடர்களுள் ஒரு பகுதியினர் சூரியனைப் பெண் தெய்வமாக எண்ணி வணங்குகின்றனர். 'பகவன்' என்னும் பெயருடன் அச்சூரியப் பெண்தெய்வம் வணங்கப் படுகின்றது. 'அம்மன்' என்னுஞ் சொல் னகர ஈற்றுடன் பெண்பாலைக் குறிப்பதுபோல 'பகவன்' என்னும் சொல்லும் னகர ஈற்றுடன் பெண் தெய்வமாகிய சூரியனைக் குறிக்கின்றது. ஜப்பானியர்களும் சூரியனை பெண் தெய்வ மாகவே வணங்கினர்.

அமெ தெரசு (Ame Terasu) என்பது அத்தெய்வத்தின் பெயராகும். சங்ககாலத் தமிழர் வெற்றித் தெய்வத்தைக் கொற்றவை என வழிபட்டனர்.

முருகன் கொற்றவையின் மகன் என,

"வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ"

என்னும் திருமுருகாற்றுப்படைப் பாடலடி குறிப்பிடுகின்றது.

சிலப்பதிகாரம் துர்க்கை பற்றி வேட்டுவ வரியலும் வழக்குரை காதையிலும் குறிப்பிடுகின்றது. இவ்வாறு பெண்தெய்வ வழிபாடு தமிழரிடையே பழைமை வாய்ந்த வழிபாடாயுள்ளது.

சக்தி தத்துவ மகிமையை இந்திய தேசம் முழுவதிலும் பரப்பிய பெருமை ஆதிசங்கரரையே சாரும். அவர் தாம் அமைத்த பல தலங்களிலே தேவியின் அம்சமாகச் ஸ்ரீசக்கரத்தையே பிரதிட்டை செய்வித்தார். சங்கரர் இயற்றிய சௌந்தர்ய லகரியும், அன்னபூர்ணாஷ்டகமும் தேவியின் சிறப்புகளைக் கூறுகின்றன. லலிதா சகஸ்ரநாமம் அம்பாளின் ஆயிரம் நாமங்களைக் கூறி அர்ச்சிக்கின்றது. இவ்வழியிலேயே அவளுடைய அருளையும் அன்பையும் அனுபவித்த அபிராமிப்பட்டர் போன்ற அடியார்கள் தங்களுடைய பாசுரங்களிலே அவற்றைப் புலப்படுத்தியுள்ளனர். அவற்றுட் சிலவற்றை இக் கட்டுரை விளக்கவுள்ளது.

அம்பாளுடைய அருட்கோலங்களையும் அருளையும் அன்பையும் அருமையான தமிழ்ச் சொற்கள் கொண்டு இனிமையான பாசுரங்களை அமைத்தவர் அபிராமிப்பட்டர். நூற்றியொரு பாடல்களைக் கொண்டது அவர் பாடிய அபிராமி அந்தாதி. மாரியென்றால் மழை பொழிகின்ற தாயின் கருணையை பட்டர் அபிராமி அந்தாதியிலே பாடுவதைக் காணலாம்.
புது நஞ்சை உண்டு கறுத்த மிடற்றையுடையவன் இறைவன். தேவர்கள் உட்பட்ட எல்லா உயிர்களையும் திருப்பாற்கடலிலே தோன்றிய ஆலகால விடத்திலிருந்து காப்பாற்றுவதற்காக அதனைத் தானே உண்ண விரும்பிய பெருங்கருணை உடையவன் அவன். அக்கருணைச் செயலுக்கு மேலான கருணைச் செயலைத் தாய் செய்வதாக அபிராமிப்பட்டர் கூறுகின்றார். அம்பிகை இறைவன் உண்ட அப்புது நஞ்சினையே அமுதமாக்கிவிடுகிறாள். குழந்தைக்கு உண்ட பால் செமியாதபோது "அமுதமாக" என்று தாய் கூறுவாள். தாயாகிய அபிராமி இறைவன் உண்ட நஞ்சை அமுதமாக்கியது வியப்பான விடயமல்ல. அபிராமிப்பட்டர் அன்னையின் இப்பெருங்கருணைச் செயலை, அருட்செயலைப் பின்வருமாறு பாடுகிறார்:

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதமென் சென்னியதே

இதன் பொருள்: "அபிராமி அன்னையே! உயிர்களிடத்திலே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூவகை நிலைகளிலும் நிறைந்து இருப்பவளே! மாணிக்கப் பூண் அணிந்த நெருக்கமான அடர்ந்த தனங்களின் சுமையால் வருந்துகின்ற வஞ்சிக்கொடி போன்ற இடையை உடையவளே! மனோன்மணியானவளே! (அன்பர்களை ஞான நிலைக்குக் கொண்டுசெல்பவள்) நீண்ட சடையை உடைய சிவபெருமான் அன்றொரு நாள் அருந்திய விடத்தை அமுதமாக்கிய அழகிய தேவி! நீ வீற்றிருக்கும் தாமரையைக் காட்டிலும் மென்மையான நின் திருவடிகளையே என் தலைமேல் கொண்டேன்."அடியாரை நோக்கிவரும் கொடிய துன்பங்களையெல்லாம் போக்குபவள் அன்னை அபிராமி என்பதை இப்பாடல்மூலம் பட்டர் புலப்படுத்துகிறார். அன்னையை வழிபடுபவர்க்கு ஞானமும் முத்தியும் கைகூடிவிடுகின்றன. சொல்லையும் அது உணர்த்தும் பொருளையும் உணர்ந்துகொண்டவர்கள் கற்றோர் ஆவர். ஆனால் கற்றோர் எல்லாரும் ஞானிகளாகிவிடார். அதற்கு அவர்கள் ஞான மொழியினை நன்கறிந்தவராய் இருக்கவேண்டும். ஞானத்தமிழ் பயின்ற பூதத்தாழ்வார் திருமாலுக்கு ஞானவிளக்கு ஏற்றக்கூடியவராக உள்ளார்.

அன்பே தகழியாய் ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியாய் - நன்புருக
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் பயின்ற நான்.

என்று ஆழ்வாரே அதனைக் குறிப்பிடுகிறார். இத்தகைய ஞானத் தமிழை அறிந்துகொள்வதற்கு சொல்லுக்கும் பொருளுக்கும் அறிகுறியாகி நடமாடும் துணைவராகிய சிவபிரானுடன் பொருந்தி நிற்கும் அம்பிகையைக் காணவேண்டும் அவள் பாதங்களை வணங்கவேண்டும் என்று அபிராமிப் பட்டர் கூறுகின்றார்.

**தொடர்ச்சி 14ம் பக்கம்.**



# பித்தளைத்தகடு

கே.எஸ்.சுதாகர்.

இருபது வருட காலமாக இருந்துவந்த 'உயர் பாதுகாப்பு வலயம்' நீக்கப்பட்டது. மக்கள் ஊருக்குச் சென்று காணி பூமி களைத் துப்பரவாக்கினார்கள். வீடுகளைத் திருத்திக் கட்டினார்கள்.

வீரபத்திரர் கோவில் அரசமரமும் மணிக் கோபுரமும் ஷெல் அடியினால் சேத மடைந்து இருந்தது. கோவில் கட்டடத்திற்கு எந்தவித பாதகமும் இல்லை. இருந்தும் கோவில் விக்கிரகங்கள் களவு போய் விட்டன. ஆமிக்காம் அருகில் இருந்த படியால் அவர்கள் கோவில் கிணற்றைப் பாவித்திருக்க வேண்டும். கிணற்றுநீர் சுத்தமாக இருந்தது.

இந்த வருடம் சித்திரா பௌர்ணமிக்குப் போகவேண்டுமென சுபாஷ் நினைத் திருந்தான். அவனுக்கு நன்றாக நினை விருந்தது, இருபது வருடங்களுக்கு முன்னர் ஒரு சித்திரை மாதத்தில்தான் எல்லோருமே ஊரைவிட்டு ஓடிப்போனார்கள். அரசமரத்தில் லவுட்ஸ்பீக்கர் கட்டி, கிராமபோனில் பக்திப் பாடல்கள் இசைக்க சித்திரா பௌர்ணமிக் கஞ்சி, மடை, அன்னதானம், தீ மிதிப்பு, உரு ஆட்டம் என்று கோவில் களை கட்டியிருந்தது. அது நடந்து சில நாட்களில் ஊர் வெறுமையாகியது.

சுபாஷ் மனைவி திலகா சகிதம் கனடாவில் இருந்து வந்து, தெல்லிப்பழையில் இருக்கும் தனது நண்பனின் வீட்டில் தங்கினான்.

வீரபத்திரர் கோவில் அவனது கொள்ளுத் தாத்தா வல்லிபுரமும், அவரின் சகோதரர் களும் சேர்ந்து கட்டிய கோவில். வருடா வருடம் கதிர்காமக் கந்தனிடம் கால் நடையாகப் போய் வருபவர்கள் அவர்கள். சித்திரா பௌர்ணமி திருவிழாவில் அவர்களின் பரம்பரையினரே முன்னுரிமை பெற்று வந்தார்கள்.

நவராத்திரி திருவெம்பாவை போன்ற ஏனைய பூஜைகள் கோவிலைச் சுற்றி இருப்பவர்கள் முறை வைத்து மாறி மாறிச் செய்து வந்தார்கள்.

சுபாஷ் மனைவியும் அங்கு போய்ச் சேர்ந்தபோது, அறிமுகம் இல்லாத வேறு சிலரும் பொங்கிக் கொண்டிருந்தார்கள்.

இருபது வருடங்களுக்கு முன்பு இருந்தவர்களில் பலரைக் காணவில்லை. புலம்பெயர்ந்து போகாமல் நாட்டில் இருந்தவர்களால் கோவில் வளவு சுத்தம் செய்யப்பட்டு இருந்தது. பழைய ஐயர் பொன்னுச்சாமி இறந்து பலவருடங்கள் ஆகிவிட்டன. அவரின் உறவு வழியிலான ஒருவர் பூஜைக்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தார்.

முன்பு கோவிலுக்கென்று ஒரு பரிபாலனசபை இருந்து வந்தது. ஊரவர்கள் மாறி மாறி அதில் அங்கம் வகித்தார்கள்.
கந்தையா மாஸ்டர்தான் பலதடவைகள் அதில் தலைவராக இருந்துள்ளார். அவரது மகன் ராஜேஸ்வரன் கிளிநொச்சியில் இருந்து வந்திருந்தான். அவனது தலைமையில் பொங்கல் தடல்புடலாக நடந்து கொண்டிருந்தது.

கோவிலில் விக்கிரகங்கள் இல்லாதபடியால் ஒரு வீரபத்திரர் படத்தை பிறேம் போட்டு எடுத்து வந்திருந்தார் ஐயர். நீண்ட காலத்தின் பின்னர் நடைபெறும் முதல் பூஜை என்பதால். ஆடம்பரமற்று ஒரு பொதுவான பூஜையாக நடத்துவதற்கு ஐயரும் பொதுமக்களும் விரும் பினார்கள்.

தொடர்ச்சி மறுபக்கம்

பூஜைக்கு முன்னர் சிறு கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது.

“இந்தக் கோவில் கந்தையா மாஸ்டரின் பரம்பரையினரால் கட்டப்பட்டது. அவரது மகன் தொடர்ந்தும் இந்தக் கோவிலைப் பராமரிப்பதற்கான செலவுகளைத் தருவ தற்கு உறுதியளித்துள்ளார்” என்று ஐயர் தனது கருத்தைத் தெரிவித்தார். அங்கிருந்த ஒருவரும் அவரின் கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை.

“கோவில் ஒரு சித்திரை மாதத்தில் எனது அப்பாவின் தந்தையின் தந்தையான வல்லிபுரத்தினாலும், அவரது உறவினர் களாலும் கட்டப்பட்டது. அதனால்தான் சித்திரா பௌர்ணமியில் அவர்களின் வாரிசுகள் தற்பை அணிந்து பூஜை செய்கின்றார்கள்” என்று ஐயரின் பேச்சை இடைமறித்துத் தனது கருத்தைச் சொன்னான் சுபாஷ். அவன் சொன்னதை அங்குள்ளவர்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவனை அலட்சியம் செய்தார்கள்.

மூலஸ்தானத்தை உற்றுப் பார்த்துக் கவலை கொண்டிருந்த திலகாவின் கண் களில், சுவரின் உச்சியில் இருந்த அந்தப் பித்தளைத்தகடு கவர்ந்திழுத்தது. அந்தப் பித்தளைத்தகட்டில் பொறிக்கப் பட்டிருந்த வீரபத்திரரின் இலச்சினை காலமாற்றத துடன் மங்கித் தேய்ந்திருந்தது.

எஞ்சியிருக்கும் ஒரே ஒரு கோவில் சாட்சி அதுதான். ஐயரைக் கூப்பிட்டு அதைச் சுற்றிக்காட்டினாள். அதையே வைத்து தற்காலிகமாகப் பூஜை செய்தால் என்ன என்று திலகா கேட்டாள்.

அங்கேயிருந்த பலரும் அவள் சொல்வதை ஆமோதித்தார்கள்.

பெரியதொரு ஏணியை சுவருடன் சாத்தினார்கள். படம் சுவருடன் ஆணி கொண்டு அறையப் பட்டிருந்தது. அதைக் கழற்றுவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. மிகவும் கஸ்டப்பட்டு அந்தப் படத்தைக் கீழ் இறக்கினார்கள். அந்தப் பித்தளைத்தகட்டில் ஆணியால் கீறப்பட்ட வீரபத்திரரின் திருவுருவம் தெரிந்தது.


ஐயர் அருகே நின்ற ராஜேஸ்வரனின் மகளிடம் அந்தப் படத்தைக் கொடுத்தார். கொஞ்சப் பழப்புளி கொடுத்து அதைத் தேய்த்து மினுக்கி வரும்படி சொன்னார்.

சற்று நேரத்தில் ஐயா என்றபடியே அந்தச் சிறுபெண் பதற்றத்துடன் ஓடி வந்தாள்.

“ஐயா... இந்தப் படத்திற்குப் பின்னால் ஏதோ வெல்லாம் எழுதிக் கிடக்கு” ஆச்சரியத்துடன் படத்தின் மறுபுறத்தைக் காட்டினாள் அவள்.

“வீரபத்திரர் கோவில், இது அமைந்துள்ள பன்னிரண்டு பரப்புக் காணி, எட்டுப்பரப்பு பனை வளவு என்பவை கக்கர் வல்லிபுரத்திற்குச் சொந்தமானது. அவரது தமையனார் கதிரே சருக்கு வீரபத்திரர் கனவில் வந்து இந்தக் கோவிலை ஸ்தாபிக்குமாறு கூறிச் சென் றுள்ளார்...” என்று தொடர்ந்து வாசித்துக் கொண்டே போனார் ஐயர்.

## தேடலை மறந்துவிடுவேனோ என்ற பயம் சுவாமி விவேகானந்தருக்கு வந்தது!





ராம கிருட்டிண பரமஹம்சர், ஒருமுறை நரேந் திரனை (விவேகானந்தர்) அழைத்து, இதுவரை கடும் தியானங்கள் புரிந்து பெற்ற ஆத்ம சக்தியெல்லாம் உனக்கு தந்துவிடலாம் என நினைக்கிறேன் என்றார்.

நரேந்திரனோ, “அப்படியா, இந்த சக்தி யெல்லாம் பெற்றால், அவை கடவுளை அறிய எனக்கு துணை புரியுமா?” என்று கேட்டார். பரமஹம்சரோ புன்னகைத்து, “அவற்றைக் கொண்டு கடவுளை அறிய இயலாது.

ஆனால் நீ ஒரு ஆசானாக மற்றவர்களுக்கு இருக்க அவை துணை புரியும்“ என்றார்.

உடனே நரேன், ”ஐயா, அப்படியானால் அவை இப்போது எனக்கு தேவைப்படாது, முதலில் கடவுள் யாரெனக் கண்டறிவதில் கவனம் செலுத்துகிறேன். அவ்வாறு கண்டறிந்தபின், இந்த சக்திகளுக்குத் தேவை இருக்குமா எனத் தெரியும்.

மேலும், இப்போது இவைகளை பெற்றுக் கொண்டாலோ, என் தேடலை மறந்துபோய், என் சுயநலத்திற்காக பயப்படுத்தி விடுவேனோ என்னவோ.” என்று மறுத்து விட்டார்

# திருமுறைகளில் திருநீறு

-முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்-

சைவநெறி நிற்போரின் அடையாளம் திருநீறு. "நீறு இல்லாத நெற்றி பாழ்" என்ற முதுமொழியும் உண்டு. இம் முதுமொழி திருநீறு அணியப்படும் இடத்தைத் தெளிவாகச் சுட்டி நிற்கிறது. நீறு, வெண்ணீறு, வெண்பொடி என்றும் அழைக்கப்படுகிறது. தேவாரம் பாடிய மூவரும் திருநீறு பற்றித் தம் பாடல்களில் பல குறிப்புகளைப் பதிவு செய்துள்ளனர்.


அடியார் வரலாற்றைப் பாடிய சேக்கிழாரும் பெரியபுராணத்தில் திருநீறு பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சைவ நெறியில் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வாழ்வோருக்குத் திருநீறு அணிதல் இன்றியமையாத ஒழுக்கமாகப் பேணப்படு கிறது. திருநீறு, விபூதி, பசிதம், பசுமம், இரட்சை, 'ாரம் என்ற பெயர்களையும் பெற்றுள்ளது. திருநீறு இறைவனையும் இறையருளையும் அணிவோருக்கு நினை வூட்டும்.

திருநீறு, அணிபவர்களுக்கு மேலான செல்வத்தைக் கொடுப்பதால் விபூதி எனப் பெயர் பெற்றது. ஒளியைத் தருவதனால் பசிதம் என அழைக்கப்பட்டது. பாவங்களை நீறாக்கும் தன்மையுடையதால் பசுமம் எனப் பெற்றது. தன்னை அணிபவர்களை என்றும் காத்து நிற்பதால் இரட்சை எனப்பட்டது. உயிர்களின் மலத்தை நீக்குவதால் 'ாரம் எனச் சிறப்புப் பெயர் பெற்றது.

குற்றமற்ற பசுவின் சாணத்தைக் காயவைத்து நெருப்பிலே சுட்டு உண்டாகும் நீறே திருநீறு ஆகும். வெண்ணிறமானதால் வெண்ணீறு என்றழைக்கப்பட்டது. திருநீற்றை அணிவதால் உள்ளும் புறமும் தூய்மை அடைகின்றன.

உடலிலே அணியப்படும் சிறப்பான ஓர் இடமான நெற்றி தூய்மையடை கிறது. இறைவன் நினைப்போடு திருநீறு அணியப் படுவதால் உள்ளமும் தூய்மை பெறுகிறது. இன்னும் திருநீறு பற்றிய பிறிதொரு கருத்து,

"திருநீறு ஆக்கும் சாணம் ஆன்மாவையும் சாணத்தில் உள்ள அழுக்கு ஆன்மாவோடு உள்ள மலங்களையும் நெருப்பு திருவருளையும் எரித்தல் திருவருள் பதிதலையும் எரிந்தபின் வந்த வெண்ணீறு மலங்கள் நீங்கத் தூய்மையடையும் ஆன்மாவையும் குறிக்கும்."என்று அமைகின்றது.



திருநீறு இரு வகையாக அணியப் படும்.

ஒன்று பரவிப் பூசுவது. இதனை உத்தூளனம் என அழைப்பர்.

மற்றது நீற்றை நீரிலே குழைத்து நெற்றியில் மூன்று குறியாக அணிவது.

இதனைத் 'திரிபுண்டரம்' என அழைப்பர். சமய தீட்சை பெற்றோர் மட்டுமே இவ்வாறு அணியத் தகுதி பெற்றவராவர்.

அவ்வாறு அணியும்போது குறிகள் வளையாது நேராக இருக்கவேண்டும். ஒன்றையொன்று தீண்டக் கூடாது. ஒவ்வொரு குறிக்குமிடையே ஓரங்குல இடைவெளி இருக்க வேண்டும். திரிபுண்டரமாகத் திருநீறு பின்வரும் உறுப்பு களிலே அணியப்படும்:

உச்சி, நெற்றி, மார்பு, கொப்பூள், முழந்தாள் இரண்டு, புயம் இரண்டு, முழங்கை இரண்டு, மணிக்கட்டு இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து.

நீறணியும்போது வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் நின்று அணிய வேண்டும்.

மூவர் பாடிய பாடல்களில் இறைவன் நீறணிந்த கோலம் சிறப்பாக எடுத்துரைக்கப்பட் டுள்ளது. பல அடைமொழிகள் திருநீற்றுக்குக் கொடுக் கப்பட்டுள்ளன. அவற்றுட் சில வருமாறு:

**"பொங்கு வெண்ணீறு" அப்பர்"**
**வெந்த வெண்ணீறு" சம்பந்தர்"**
**சுண்ண வெண்ணீறு" சுந்தரர்**

இறைவன் நீறணிந்த திருக்கோலத்தைப் பாடலிலே விளக்கும் மூவரும் 'பொடி' எனவும் நீற்றைக் குறிப்பிட்டுள்ளனர்.

வெந்த நீறு பொடியாக இருப்பதால் இப் பெயரைப் பெற்றது. திருக்கோயில்களில் பொடியணிந்த இறைவன் திருக்கோலம் தேவாரங்களிலே அழகாகக் காட்சிப்படுத் தப்பட்டுள்ளது.

"வெண்பொடி சேர்திரு மார்பர்"
சம்பந்தர்
"பொடிநாறு மேனியர்"
சம்பந்தர்
"பொடிகொள் செம்பவளம் புரைமேனி"
அப்பர்
"வெந்த வெண்பொடி பூசவல்லானே"
சுந்தரர்
"வெள்ளை நுண்பொடிபூசும்விகிர்தர்"
சுந்தரர்
"பொடியேறு திருமேனி பொலிந்து
தோன்றும்"
அப்பர்

சம்பந்தருடைய முதற் பாடலிலே வரும் பொடி பற்றிய குறிப்பு சிறப்பானது.

அப் பாடலில், அவர்இறைவன்,"காடு டைய சுடலைப் பொடிபூசி" காட்சியளித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

வேறு பாடல்களில் "அது சுடுவெண்பொடி" எனக் குறிப்பட்டு உள்ளார். மேலும் "மாண்டார் சுடலைப் பொடிபூசி" எனவும் பதிவுசெய்துள்ளார்.இறந்தவர்களைச் சுடலை யிலே எரிக்கும்போது சாணத்தை வரட்டியாக் கிக் காயவைத்த பின்னர் அவற்றையே சிதையாக அடுக்குவர்.

அதில் நெருப்பூட்டி எரிப்பர். அது முழுவதும் எரிந்து பொடியாகிவிடும்.
இச் சாம்பலை இறைவன் திருமேனியிலே அணிந்திருக்கிறார். சுடுகாட்டிலே நின்று நடனம் ஆடுகிறார்.

"பொடிகள் பூசி புறங்காடு அரங்காகப்
படிகொள் பாணி பாடல் பயின்றாடும்"
என இறைவன் ஆடும் கோலத்தைச் சம்பந்தர் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்து மெய்யடியார்களின் நீறணிந்த கோலமும் பாடல்களிலே பதிவு செய்யப் பட்டுள்ளது. அப்பருடைய பாடற் குறிப்பை இங்கே காணலாம்:

"பொடிகள் பூசிப் பாடும் தொண்டர்"
"பொடிக்கொண்டு பூசிப்புகுந் தொண்டர்"
"சாம்பலைப் பூசி சலமின்றித் தொண்டுபட் டுய்மின்களே"

திருக்கோயிலில் பாடும் தொண்டர்கள் பொடி பூசியிருக்கிறார்கள். வருபவர்கள் நுழையுமுன் நெற்றியிலே பொடியைப் பூசியபின்பே நுழை கின்றார்கள்.

அப்பர் பல திருக்கோயில்களுக்குச் சென்று பதிகம் பாடியவர். அதனால் அடியார் அங்கு வரும் காட்சியை நேரிற் காணும் வாய்ப்புப் பெற்றவர். அடியாரைப் பணியும் வழிபாட்டு நடைமுறையைத் தொடக்கிவைத்த சுந்தரர்,"முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்"எனக் குறிப்பிட்டுள்ளார்.

சம்பந்தர் வானுலகத் தேவர்களும் திருநீறு அணிவதையும் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

"வானவரமேலது நீறு" "மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடிநீறு"எனப் பாடியுள்ளார்.

திருநீறு அணிவதன் பயன் பற்றிச் சம்பந் தருடைய திருநீற்றுப் பதிகம் விளக்கமாகக் கூறியுள்ளது,


"மந்திமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர்வாயுமை பங்கன் திருவாலவாயான்
திருநீறே"


திருநீறு மந்திரமாக உள்ளது. நிலவுலகில் உள்ளவராலும் வானுலகிலே உள்ளவராலும் அணியப் படுவது. அணிபவர்க்கு அழகு தருவது. வணங்கப்படுவது. சைவசமயத்திலே நிலைத்து நிற்பது. எனவே அதை அணிவது நன்மையே தரும்.

திருநீற்றின் பெருமை பற்றியும் அதன் பயன் பற்றியும் திருமூலர் பின்வருமாறு குறிப்பிட் டுள்ளார்.
"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே"

**தொடர்ச்சி 12ம் பக்கம்**

# உள்ளே! உள்ளே!! இறைவன் உன் உள்ளே!!!





சேவியர்

இறைவனைத் தேடி மனிதர்கள் எல்லா இடங்களிலும் அலைந்து திரிகின்றனர். சிலருக்கு இறைவன் மலைகளின் உச்சியில் இருப்பார் எனும் நம்பிக்கை. எனவே மலைகளை நோக்கி அவர்கள் நடக்கிறார்கள்.

சிலருக்கு ஆண்டவன் சில சிற்பங்களின் உள்ளே சிக்கிக் கிடக்கிறானோ எனும் சந்தேகம். எனவே அவர்கள் அத்தகைய சிற்பங்கள், சிலைகள் இருக்கும் திசை நோக்கி சென்று கொண்டே இருக்கிறார்கள்.

சிலருக்கு அவன் நதிகளில் கலந்திருப்பதாய் நம்பிக்கை. அவர்கள் புனித நதிகளை நோக்கி பயணங்கள் செல்கின்றனர்.சிலருக்கு அவன் ஆலயங்களில் ஒளிந்திருப்பதாய் சந்தேகம் எனவே ஊர் ஊராய் ஓடித் திரிகிறார்கள்.

ஊரெல்லாம் சுற்றிக் களைக்கும் மனிதர்கள் கடவுளை எங்கேயும் காணமுடியாமல் சோர்ந்து போய் ஒரு இடத்தில் தனிமையில் அமரும் போது, கடவுள் அவர்களுக்கு உள்ளேயே இருப்பதைக் கண்டு கொள்கின்றனர்.

தலையில் கண்ணாடியை வைத்துக் கொண்டே வீடுமுழுவதும் அதைத் தேடிய தாத்தாவைப் போல அவர்கள் உணர்கிறார்கள். கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்தோமே என அவர்கள் சுயம் உணர்கையில் வயது அவர்களை வாழ்க்கை யின் எல்லைக் கோட்டின் அருகே கொண்டு போய் நிறுத்தி விடுகிறது.

புத்தனுக்கு ஞானம் தோன்றியது தேசங்கள் தாண்டிய பயணத்தில் அல்ல. போதி மரத்தடியில் தன்னை உணர்ந்த போது தான். காரணம் இறைவன் இருக்க வேண்டிய இடம் வெளியே அல்ல, உள்ளே. இதயத்தின் உள்ளே !

இறைவனை வெளியே தேடுவது மிக வசதியானது. ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சென்று ஒரு பூஜை செய்து கொள்ளலாம். அல்லது ஏதோ ஒரு ஆலயத்தில் சென்று பிரார்த்தனையை முடித்து விடலாம். அலாரம் வைத்தேனும் தொழுகை செய்து முடிக்கலாம். இதெல்லாம் மிக எளிதான விஷயங்கள்.
ஆனால் உள்ளேயே கடவுளுக்கு உள்ளேயே இடம் கொடுப்பதென்பது நமக்கு மிகப்பெரிய இடஞ்சல்.

அப்படி என்னென்ன சிக்கல் ?

கடவுள் உள்ளே இருக்கிறார் என்றால், நமது கண்கள் வழியாக அவர் பார்க்கிறார். அதனால் பார்வைகள் ஆபாசங்களுக்கு விலகியிருக்க வேண்டியிருக்கிறது.
பெண்களைப் பார்க்கும் போது கண்களைப் பார்க்கும் கண்ணியம் தேவைப்படுகிறது. நூல்கள், இணைய தளங்கள், சினிமாக்கள் இங்கெல்லாம் கடவுளையும் கையோடு கூட்டிக் கொண்டு போகலாமா என யோசிக்க வேண்டியிருக்கிறது !
கடவுள் உள்ளே இருக்கிறார் என்றால், அவர் இருக்கின்ற இந்த உடலானது ஆலயமாகி விடுகிறது. மதுரை மீனாட்சியம்மன் ஆலயத் துக்குள்ளே போய் ஒரு குவாட்டர் அடித்து நாலு சிகரெட் புடிப்போம் என்றால் மனம் பதட்டமாகிறது இல்லையா ? நமது உடல் ஆலயமானால் அதில் மதுவையும், புகையை யும், தேவையற்ற போதையையும் உலவச் செய்ய முடியாதல்லவா ?

கடவுள் உள்ளே இருக்கிறார் என்றால் நமது சிந்தனைகளை அவர் வாசிக்கிறார் என்று பொருள். நமது சிந்தனைகளைச் சீர்செய்ய வேண்டியிருக்கிறது. கெட்ட சிந்தனைகளை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டிய கட்டாயம் எழுகிறது. ரகசியங்களைப் புதைத்து வைக்கும் குப்பை மேடாக மனதைப் போட முடியாது அல்லவா ?

கடவுள் உள்ளே இருக்கிறார் என்றால் நமது செயல்களின் பின்னணியில் செயல்படும் நமது மனநிலை தூய்மையாய் இருக்க வேண்டியது அவசியமாகிறது. நாம் புகழையும் பெருமை யையும் எதிர்பார்த்து பிறருக்கு உதவுகி றோமா?

நமது நட்பின் பின்னணியில் ஏதேனும் சுயநலம் இருக்கிறதா என்றெல்லாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

"நாலு பேருக்கு நல்லது நடக்கும்ன்னா எதுவுமே தப்பில்லை" என்பதெல்லாம் மிகவும் தவறான கோட்பாடுகள். நல்ல செயல்கள், கெட்ட செயல்கள் என்பது போல செத்த செயல்கள் என்றொரு வகை உண்டு. நல்ல செயல்களாய் வெளிப்பார்வைக்குத் தெரிகின்ற செயல்கள் தவறான காரண காரியங் களுக்காய் செய்யப்படுகிறதெனில் அவை செத்த செயல்கள்.

இறைவன் உள்ளே இருக்கிறார் என்றால் நாம் அவருடைய கண்களை விட்டு எப்போதுமே தப்ப முடியாது. இருட்டின் கையில் இருந் தாலும், அடைக்கப்பட்ட தனியறையில் இருந்தாலும் கடவுள் கூடவே இருக்கிறார் எனும் சிந்தனையுடன் தவறுகளுக்கு விலகி யிருக்க வேண்டிய கட்டாயம் வருகிறது.

கடவுள் உள்ளே இருக்கிறார் என்றால் அவருக்குப் பிடித்தமான வாழ்க்கையை ஒவ்வொரு நொடிப்பொழுதும் வாழவேண்டியது அவசியமாகிறது.
ஏதோ வாரமொருமுறையோ, மாதமொரு முறையோ செல்லும் மத அடையாளத்தைத் தாண்டி வாழ்க்கையே புனிதமடைய வேண்டிய கட்டாயம் உருவாகிறது.

கடவுள் உள்ளே இருக்கிறார் என்றால் அவருக்குப் பிடித்தமான வாழ்க்கையை ஒவ்வொரு நொடிப்பொழுதும் வாழவேண்டியது அவசியமாகிறது. ஏதோ வாரமொருமுறையோ, மாதமொருமுறையோ செல்லும் மத அடை யாளத்தைத் தாண்டி வாழ்க்கையே புனித மடைய வேண்டிய கட்டாயம் உருவாகிறது.

கடவுள் உள்ளே இருக்கிறார் என்றால், கண்ணுக்கு மை தீட்டி, உதட்டில் சாயம் பூசி, அழகிய ஆடை அணிந்து, நேர்த்தியாக அழகாக காட்சியளிப்பது போல, மனதையும் அழகுபடுத்த வேண்டிய தேவை எழுகிறது. மனதின் அழுக்கைக் கழுவிக் களைய வேண்டிய கட்டாயமும் உருவாகிறது.

காரணம் கடவுள் உள்ளே இருந்தால், அகத்தின் அழகு முகத்தில் தெரிய வேண்டும். அதாவது கடவுள் முகத்தில் பிரதிபலிக்க வேண்டும். முகத்தில் சாந்தமும், பணிவும், பொறுமையும் மிளிர வேண்டும். நாவில் நன்மையே கூடாரமடித்துக் குடியிருக்க வேண்டும் எனும் மாற்றங்கள் தேவைப்படு கின்றன.

இப்படி ஏகப்பட்ட தேவைகள், கட்டாயங்கள், மாற்றங்கள் தேவைப்படுவதால் தான் நாம் கடவுளை இதயத்துக்குள் அமர வைக்க தயங்குகிறோம். எப்படியாவது இதயத்தை விட்டு அவரை வெளியேற்றி விட்டால் காணிக்கைகள், பரிகாரங்கள், பயணங்கள் மூலம் கடமையைக் கழித்து விடலாம் என்பது அவர்களுடைய எண்ணம்.

கடவுள், நாம் தேடிப் போகவேண்டியவரல்ல. நம்மைத் தேடி வருகிறவர். காரணம், நாம் அனைவரும் அவருடைய பிள்ளைகளாக இருக்கிறோம். நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று தான். அவர் வரும்போது அவரை இதய வீட்டுக்குள் அழைத்து நமது மனதின் சாவியை அவர் கையில் ஒப்படைக்க வேண்டியது தான்.



தொடர்ச்சி 19ம் பக்கம்

# நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம முருகன் ஆலய சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா










தேரினை உருவாக்கிய ஸ்தபதி விஸ்வலிங்கத்திற்கான கௌரவிப்பு

நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம முருகன் தேவஸ்தானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா இன்று 27.06.2015 சனிக்கிழமை காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. வெள்ளோட்டம் விடப்பட்டதைத் தொடர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இதில் ஆசியுரைகளை ஆலயப் பிரதம குரு நீர்வைமணி சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்களும் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் வாழ்த்துரைகளை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் த.சித்தார்த்தன் ஆகியோர் ஆற்றினர். தேரினை உருவாக்கிய நீர்வேலியைச் சேர்ந்த சிற்ப ஸ்தபதி கலாபூஷணம் விஸ்வலிங்கம் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். இத்தேர் கலாபூஷணம் விஸ்வலிங்கம் ஸ்தபதியின் 14 ஆவது தேர் என்பது குறிப்பிடத்தக்கது.









## ஆவரங்காலில் இராஜகோபுரக் கும்பாபிஷேகம்

வட இலங்கையில் முக்கிய சிவத்தலங்களில் ஒன்றாக விளங்கும் ஆவரங்கால் சிவன்கோவிலில் அம்மன் வாசலில் புதிதாக அமைக்கப் பெற்ற ஐந்து தளங்களைக் கொண்ட இராஜகோபுரத்தின் கும்பாபிஷேகம் 12.06.2015 வெள்ளிக்கிழமை காலை 8.20 மணிக்கு இடம்பெற்றது. கும்பாபி ஷேகக் கிரியைகள் ஆலயப் பிரதம குரு வண. ந.யோகானந்தேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றன. .கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தரதேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோரின் ஆசியுரைகள் இடம்பெற்றன. ஆவரங்கால் சிவன் கோவில் மீது கலாபூஷணம் கோப்பாய் சிவம் இயற்றிய கீர்த்தனைகள் அடங்கிய நூல் வெளியீடு செய்யப் பட்டது. நூலை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் வெளியிட்டு வைத்தார்.கோபுரத்தை நிர்மாணித்த சிற்பியாகிய தமிழகம் சீர்காழியைச் சேர்ந்த க.புருஷோத்தமன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் தில்லைநாதனால் வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். பாடல்களை யாத்த கோப்பாய் சிவம் ஆலய பரிபாலன சபைச் செயலர் நீ.மயில்வாகனத்தால் கௌரவிக் கப்பட்டார். கோபுரநிர்மாண வேலைகளை முன்னெடுத்த பண்டிதரின் பேரன் சயந்தனும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

# உலகில் இரண்டு விதமான மனப்பான்மைகள் உள்ளன

1. உயர்வு மனப்பான்மை
2 . தாழ்வு மனப்பான்மை

நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்காத வரை
எப்படித் தாழ்வானவராக இருக்க முடியும்?
எப்படி உயர்வானவராக இருக்க முடியும்.


இவ்வுலகில் நீங்கள் மட்டும் இருந்தால்
உங்களை நீங்கள் யாருடன் ஒப்பிட
முடியும்?
எப்படி நீங்கள் தாழ்ந்தவராக இருக்க
முடியுமா ?
இல்லை உயர்ந்தவராகத் தான் இருக்க
முடியுமா ?
நீங்கள் நீங்களாக தான் இருக்க முடியும்.

இதுதான் உயிரின் (ஆன்மாவின்) உயர்ந்த
தன்மை.

அது யாருடனும்
ஒப்பிடுவதில்லை.
நீங்கள் உங்களை
யாருடனும் எதற்கும்
ஒப்பிட வேண்டாம்.

நீங்கள் தனித்தன்மை
வாய்ந்தவர்.

நீங்கள் சிறப்பானவர்.




தனியே இருக்கும்போது
நீங்கள் உயர்ந்தவரும் அல்ல"தாழ்ந்தவரும்
அல்ல.

# பத்து பேர்



தனது குடும்பம் என்ற ஒரு பத்து பேர்
தனது நண்பனும் பகைவனும் என்ற பத்து பேர்
தனது தொழிலில் ஒரு பத்து பேர்
தனது வீதியில் ஒரு பத்து பேர்
தனது ஜாதியில் ஒரு பத்து பேர்
இந்த ஐம்பது பேரின் நடுவில் தன்னை உயர்த்திக் காட்டிக் கொள்வதும், பாசமாக, நட்பாக, அன்பாக, வீரனாக, நல்லவனாக, என்று காட்டிக் கொள்வதுமே வாழ்வின் குறிக்கோளாக இருக்கிறது.
இந்த ஐம்பது பேரின் நடுவில் ஏற்படும் அவமானமும், கோபமும், கௌரவமும் மட்டுமே அவனை பாதிக்கின்றன.

---

6ம் பக்கத் தொடர்ச்சி

எங்கள் பெருமானுடன் இணைந்துநிற்கும் எம்பெருமாட்டியின் புது மலர்கள் போன்ற மென்மையான, அழகான, நறுமணம் வீசுகின்ற, புது மலர்ச்சியையுடைய, நீர்மையை உடைய பாதங்களை இரவும் பகலும் தொழுதால் அழியாத அரசபோகமும் முத்திநெறியும் கைகூடும்.

சொல்லும் பொருளுமென நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியேநின் புதுமலர்த்தாள்
அல்லும்பகலும் தொழுமவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

சொல்லும் பொருளுமாய் நிற்கும் இறைவனுடன் இணைந்து நிற்கும் அம்மையின் வடிவைக் கண்டு தொழுதால், அழியாத அரசபோகம் கிடைக்கும் அவ்வரசபோக அனுபவத்தாலே ஏற்படும் தவநெறியின் விளைவாக முத்தியும் சித்தித்துவிடும் என்கிறார் அபிராமிப்பட்டர்.
அம்பாளின் அழகுக் கோலத்தினையும் அவள் அருட்சிறப்புக்களையும் கவிநயம் தோயப் பாடியவர்களுள் அபிராமிப் பட்டருக்கு நிகர் வேறு எவருமிலர் என்றே கூறலாம். அவர் பாடிய அபிராமி அந்தாதி ஒரு முழுமை பெற்ற பிரபந்தமாகும்.



ச.லலீசன்,

# யாழ்ப்பாணத்திலும் வள்ளலார் காட்டிய வழிபாட்டு நெறி களைகட்டுகிறதா ?

இராமலிங்க வள்ளலாரின் வழிபாட்டு நெறி தென்மராட்சி மீசாலை வேம்பிராய்ச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானகோட்டத்தில் முன்னெடுக்கப் படுகின்றது. கடந்த தைப்பூச நாளன்று (03.02.2015) பல நூற்றுக்கணக்கான அன்பர் கள் காலை மதியம் இரவு என ஜோதி தரிசனம் கண்டு பசியாற்றுவித்தல் செயற்பாடுகளிலும் பங்கேற்றுச் சென்றுள்ளனர்.

வள்ளலார் காட்டிய அருட்பெருஞ்சோதி வழி பாட்டில் பலரும் ஆர்வத்துடன் பங்கேற்கும் நிலையில் வள்ளலார் பற்றிய பதிவாகவும் இலங்கையில் அதன் செல்வாக்குக் குறித்த முன்வைப்பாகவும் இக்கட்டுரை அமைகின்றது.

05.10.1823 இல் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள மருதூரில் பிறந்த இராமலிங்க அடிகளாரே பின்னாளில் வள்ளலார் என உலகோரால் போற்றப்படலானார். கடவுளுக்கு உருவம் இல்லை என்றும் அவரே அருட்பெருஞ்சோதி என்றும் குறிப்பிடும் அவர் 30.01.1874 இல் தைப்பூச நாளில் சோதியில் கலந்தார்.

பசியாற்றுவித்தலே உலகோர் செய்யக் கூடிய மிகப்பெரும் அறப்பணி எனக் குறிப்பிடும் வள்ளலார் 23.05.1867 இல் தமிழகம் வடலூரில் தருமச் சாலை நிறுவி பசிப்பிணி அகற்றும் தருமத்தைத் தொடக் கினார்.

வடலூரில் உள்ள தருமச் சாலையில் மூன்று வேளையும் உணவு வழங்கி பசியாற்றுவிக்கும் செயற்பாடு தொடர்ந்து மேற்கொள்ளப் படுகின்றது. தைப்பூச நாளில் இலட்சக்கணக் கானோர் வடலூரில் கூடி ஜோதி தரிசனம் மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இலங்கையில் மீசாலையிலேயே வள்ளலார் வழியில் அமைக்கப்பட்ட வழிபாட்டிடம் முதன்முதலாக 2010 இல் நிறுவப்பட்டது. சுவிஸ் நாட்டில் இருந்து இலங்கைக்கு வந்த அளவெட்டியைச் சேர்ந்தவரான கனகசபாபதி கேதீஸ்வரன் என்பவர் பல இலட்ச ரூபாக் களைச் செலவிட்டு பிரமாண்டமாக சத்திய ஞான கோட்டத்தை அமைத்துள்ளார். இவர் தற்போது தென்மராட்சி கல்வயலில் வாழ் கின்றார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வள்ளலார் பாடல்களை மறுத்து அவை மருட்பாக்கள் என வழக்குத் தொடர்ந்தது வரலாறு. நாவலர் மீதிருந்த பக்தியினால் இலங்கையில் வள்ளலார் சிந்தனைகள் இன்று வரை செல்வாக்குப் பெறவில்லை ஆயினும் உல களாவிய நிலையில் வள்ளலாரின் சிந் தனைகள் பலரையும் கவர்ந்து வருகின்றன. இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் சிந்தனைப் புலத்தில் ஏற்பட்டுள்ள திசைமாற்றமோ? என எண்ணத் தோன்று கின்றது.



வள்ளலார், தன் வாழ்வில் பெரும்பகுதியைச் சென்னையில் கழித்தவர். தீவிர இந்துவான இவர் திருவாசகம் மற்றும் திருமுறைகளை நன்கு படித்தவர். இந்து சமயத்தில் உள்ள குறைகளைக் கண்டு தீர்வு காண முயன்றார். வேறு சமயங்களில் உள்ள நல்ல அம்சங்களை இந்து சமயத்திற்குள் கொண்டு வர வேண்டும் எனக் கருதினார். இந்து சமயத்திற்கெனப் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். இதனால் பலத்த எதிர்ப்புக்களையும் சந்தித்தார்.

இராமலிங்க அடிகள் கொள்கைகள்

- கடவுள் ஒருவரே. அவர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர்.
- புலால் உணவு உண்ணக்கூடாது.
- எந்த உயிரையும் கொல்லக்கூடாது.
- சாதி, மதம், இனம், மொழி முதலிய வேறுபாடு கூடாது.
- இறந்தவர்களை எரிக்கக் கூடாது. சமாதி வைத்தல் வேண்டும்.
- எதிலும் பொது நோக்கம் வேண்டும்.
- பசித்தவர்களுக்கு சாதி, மதம், இனம், மொழி முதலிய வேறுபாடு கருதாது உணவளித்தல் வேண்டும்.
- சிறு தெய்வ வழிபாடு கூடாது. அவற்றின் பெயரால் பலி இடுதலும் கூடாது.
- எல்லா உயிர்களும் நமக்கு உறவுகளே. அவற்றைத் துன்புறுத்தக்கூடாது.
- மத வெறி கூடாது .


வள்ளலார் பாடிய ஆறாயிரம் பாடல்களின் தொகுப்பு திருவருட்பா என அழைக்கப்படுகின்றது. சைவ சமயத்தில் சீர்திருத்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என நினைத்த வள்ளலாரின் திருவருட்பாவை நம்நாட்டைச் சேர்ந்த ஆறுமுகநாவலர்இ சதாவதானி கதிரைவேற்பிள்ளை போன்ற பழைமை வாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.
திருவருட்பா விற்கு எதிராக கண்டன நூல்களை அவர்கள் வெளியிட்டனர். இக் கண்டன நூல்களுக்கு எதிரான பல கண்டன நூல்களும் அக்காலத்தில் எழுந்திருந்தன.

நாவலர் மண்ணில் வள்ளலார் பற்றிய சிந்தனைகள் விரிவது மக்கள் சிந்தனையின் விரிவுத்திறனே அன்றி வேறொன்றில்லை.

இருப்பினும் யாழ்ப்பாண மக்கள் வள்ளலார் குறித்த தெளிவான பார்வையில் இருப்பதாகத் தெரியவில்லை.

நாவலரை எதிர்க்கும் நாவலர் குறிப்பிட்ட சாதியம் சார்ந்த நடைமுறைகளைக் கண்டிக்கும் பலர் வள்ளலாரின் சிந்தனைகளை உயர்த்திப் பேசுவதை இக்கட்டுரையாளரால் அவதானிக்க முடிந்தது.

இருப்பினும் வள்ளலார் குறிப்பிட்ட அருட்பெருஞ்சோதி வழிபாடு, புலால் மறுத்தல், இறந்தவர்களை எரிக்காது சமாதி வைத்தல் முதலிய செயற்பாடுகளை தொடர்சியாக மேற்கொள்வதற்குத் தயாரான நிலையில் எத்தனை பேர் இங்குள்ளனர் என்பதும் கேள்விக் குரியதே?



**வள்ளல் அடிமை:கனகசபாபதி கேதீஸ்வரன்**



# சிற்பம்

சிற்பம்

ஜென்துறவிகளின் மடாலயத் திற்கு புகழ் பெற்ற ஓவியன் ஒருவன் வந்தான்.

தான் வரைந்த ஜென் ஓவியங் களைக் கடவுள் என்று மக்கள் நம்புகிறார்கள் என்றும், எனவே, தான் கடவுளை விடவும் உயர்ந் தவன் என்ற ஆணவத்துடனும் இறுமாப்புடனும் பேசினான்.


அவனை வரவேற்ற மடாலயத்தின் மூத்த துறவி, தானும் ஒரு சிற்பி என்றும், மற்ற சிற்பங்கள் போலன்றி தன சிற்பம் நிமிடத்துக்கு நிமிடம் உரு மாறக் கூடியது என்றும் அது ஓரிடத்தில் நிற்காமல் இயங்கக் கூடியது என்றும் சொல்ல, ஓவியனால் நம்ப முடியவில்லை. துறவியும் மறுநாள் காலை அவனுக்குக் காட்டுவதாகக் கூறி அவனை அங்கு தங்கச் செய்தார்.

மறுநாள் காலை துறவி அவனை அழைத்து வந்து காட்டினார். அங்கு ஒரு பெரிய பனி கட்டியில் சிற்பம் ஒன்று இருந்தது. ““இதுதான் நான் உருவாக்கிய சிற்பம். இது நிமிடத்துக்கு நிமிடம் மாறிக்கொண்டே இருக்கும். இதைப் போன்ற ஆச்சரியமான சிற்பம் எதையும் நீ பார்த்திருக்க முடியாது.““என்றார் துறவி.

சிறிது நேரத்தில் பனிக்கட்டி உருகித் தண்ணீராய் ஓடியது. துறவி, ““பார்த்தாயா?எனது சிற்பம் ஓரிடத்தில் நிற்காமல் ஓடவும் செய்கிறது.““ என்றார். தண்ணீர் சிறிது நேரத்தில் ஆவியாகி விட்டது.““இப்போது என் சிற்பம் பிரபஞ்சத்தில் கலந்து விட்டது. இதை விடப் பெரிய கலைப் படைப்பு என்ன இருக்கிறது?““ என்று கேட்டார். ஓவியனின் ஆணவம் அழிந்து மடாலயத்தில் சீடனாய்ச் சேர்ந்தான்.

நாம் இந்த பிரஞ்சத்தோடு காணாமல் கலந்து விட காத்திருக்கும் உருவங்கள். அதற்குள்தான் எத்தனை ஆணவம், அகம்பாவங்களில் மனிதன் மூழ்கி விடுகிறான்.


ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்



தினசரி மாலை
6.00 மணிக்குப்
பூஜை உண்டு

Tel: 02304/ 16721

Robert koch Str.5
58239 Schwerte
Germany

Tel: 02304- 910 9445
0177 20 16 941

துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்





















## சாந்தநாயகி சமேத சந்திரமௌலீசஸ்வரர் ஆலயம் டோட்மூண்ட தேர்த் திருவிழா 28.06.2015





படங்கள் : நந்தபாலன்

# உள்ளே உள்ளே இறைவன் ...


11ம் பக்கத் தொடர்ச்சி

கடவுளுக்காய் கதவைத் திறக்க வேண்டுமெனில் உள்ளே நிரம்பியிருக்கும் தீயவர்களை முதலில் வெளியேற்ற வேண்டும். காலி செய்யாத கோப்பையில் புதியதாய் எதையும் ஊற்ற முடியாது.

உள்ளே நுழைந்தபின் அவர் நிம்மதியாய் இருக்கும் வகையில் நமது இதயம் தூய்மையானதாய் இருக்க வேண்டும். மனதைத் தூய்மைப்படுத்த அவரது உதவியையும் தயங்காமல் நாடலாம்.
உள்ளே நுழைந்த கடவுளுக்கு முழு அதிகாரத்தையும் கொடுக்க வேண்டும். அந்த அறையில் போகாதே, இந்த அறைக்குள் நுழையாதே என்றெல்லாம் கட்டுப்பாடுகள் விதிக்கக் கூடாது.

அதற்கு நமது மனதில் பாவத்தின் அறைகள் இல்லாமல் இருக்க வேண்டியது அவசியம்.

அப்புறமென்ன, உங்களுடைய வாழ்க்கை செம்மைப்படும், அர்த்தப்படும். மதமெனும் சடங்குகள் தாண்டி இறைவனின் வசம் உங்கள் இதயம் இளைப்பாறும். வருகின்ற கவலைகள், சோர்வுகள். சவால்கள் எல்லாவற்றையும்



சமாளிக்க உங்களோடு கடவுளும் இருந்தால் யானை மீதிருக்கும் சிற்றெறும்பாய் உணர்வீர்கள்.

அதுதான் ஆன்மீகத்தின் தேவை. உள்ளே.. உள்ளே.. இறைவன் உன் உள்ளே வரட்டும்.

உன் வாழ்க்கை துயரங்களை விரட்டும். அதுதான் புனிதத்தின் பயணம்.

புனிதப் பயணம் என்பது
நாம் செல்வதல்ல
நமக்குள் செல்வது !

---

10ம் பக்கத் தொடர்ச்சி

# திருமுறைகளில் திருநீறு

திருநீறு அணிவதால் அடையும் பயனை நன்குணர்ந்தோர் அதனைப் பிறருக்கு உணர்த்தியுள்ளனர். அதனைச் சைவநெறி நிற்பவர் இன்று செய்யக் கடமைப்பட்டுள்ளனர். திருநீற்றை நெற்றியிலே அணியப் பலர் தயங்குகின்றனர்.
ஆனால் நவீனப் பூச்சுகளைத் தயங்காமல் பூசி மகிழ்கின்றனர். குறிப்பாகப் பெண்களின் ஒப்பனைகள் குறிப்பிடத் தக்கவை.

பல ஆயிரம் ஆண்டுகளாகப் பேணி அணிந்தவர்க்கெல்லாம் பெருமை கொடுத்தது நீறு. அதை அணிந்திருப்பவரைக் காண்பதே ஓர் இனிய காட்சியாகும்.
திருமுறைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள திருநீறு இறைவன் கோல அழகிலே நம்மை ஈடுபட வழி காட்டும் குறிப்புகளாகும். திருக்கோயில் வழிபாட்டுக்குச் செல்வோர் நீறு பூசிச் சென்றாலும் அங்கு இறைவனுக்கு அபிடேகம் செய்யப்பட்ட திருநீற்றைப் பிரசாதமாக வீட்டிற்கு எடுத்துச் செல்லும் போது மன நிறைவுடன் செல்வர்.
நீறு நமக்குக் காவல். நமது நோய்களையும் பிணிகளையும் தீர்ப்பது. நீறணிவதை மூட நம்பிக்கை எனப் புறந் தள்ளுவோரும் உளர். இன்றையப் பூச்சுப் பொடிகள் தோன்றுவதற்கு முன்னர் திருநீறு அணியும் வழக்கம் இருந்துளது.
ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான அலங்காரமாக நீறணிதல் நடைபெற்றாலும் அது நம்மை எப்போதும் காத்து நிற்கும் என்ற ஆழமான நம்பிக்கை ஒருபோதும் அழியாது.

அதற்கு உறுதுணையாக இருப்பவை திருமுறைகளில் பதிவுசெய்யப்பட்டுள்ள குறிப்புகளே என்பதில் ஐயமில்லை. எனினும் இன்று திருநீற்றுத் தயாரிப்பில் புகுந்துள்ள கலப்படம் களையப்படவேண்டும் என்பதும் நினைவு ஊட்டப்படவேண்டியதே.

# பத்மாசனம்



## உடலையும் உயிரையும் ஆன்மாவையும் ஒன்றிணைக்கும் யோகக்கலை!

**கோ.வைரக்கண்ணன் (சேலம்)**

யோகாசனம் செய்வதால் உடல் ஆரோக்கியம் பெருவதுமட்டும் இல்லாமல் ஒழுக்கம், மனக்கட்டுப்பாடு, மனஅமைதி பெறுகிறோம்.

"யோகா" என்னும் சொல். சிதறும் சக்தியைக் கட்டுப்படுத்துதல் என்பது இதன் பொருள். இக்கலையை ஆதிசித்தரான சிவபெருமான் அருளினார் என்பர். அதை சித்தர் பெருமக்கள் தங்கள் இறைசக்தியால் அறிந்து, மக்கள் பயன்படும் வகையில் அளித்தனர். இக்கலையை தகுந்த குரு மூலம் கற்றுக்கொண்டு தினமும் பயிற்சிசெய்தால், என்றும் இளமையுடன் திகழ்வதுடன் உடல்நலமும் சீராக இருக்கும்.

உடலையும் உயிரையும் ஆன்மாவையும் ஒன்றிணைக்கும் அற்புதமான வாழ்வியல் கலை இது. இந்த யோகக்கலையின் தொடர்ச்சியே தியானமாகும். தியானத்தில் ஈடுபடுவோருக்கு மனம் அமைதிபெறும். தீர்க்கமான முடிவுகளை எடுக்க முடியும். எனவே ஆண்- பெண் அனைவருமே இந்தக் கலையைப் பயின்று பயன்பெறவேண்டும்.

யோகாசனங்களில் ஆசனவணக்கம், சூரிய நமஸ்காரம், சர்வாங்காசனம், மத்யாசனம், பாதஹஸ்தாசனம், தனுராசனம், விபரீதகரணி, அர்த்தமத்யாசனம், ஹலாசனம், புஜங்காசனம், யோகமுத்ராசனம், அர்த்தசக்கராசனம், பக்ஷிமோத்தாசனம், சலபாசனம், வஜ்ரோளி முத்ராசனம், சுப்தவஜ்ராசனம், திரிகோணாசனம், பூரணசந்தியாசனம், சவாசனம் என பல வகை உண்டு.

அவற்றில் பத்மாசனம்

யோகாசனம் செய்வதற்கு சரியான நேரம் காலைநேரம், காரணம் காலை நேரத்தில் உடல் சுறுசுறுப்புடன் மனம் தெளிவாக இருக்கும்.

காலைகடன்களை முடித்துவிட்டு பின் பச்சை தண்ணீரில் குளிக்கவும் அல்லது மிதமான நீரில் குளித்தபின்பு நாம் யோகாசனம் செய்யலாம். ( பச்சை தண்ணீரில் குளித்தால் மிகவும் நல்லது ) ஒரு டம்ளர் தண்ணீர் மட்டுமே குடித்தால் போதுமானது மலை நேரத்திலும் யோகாசனம் செய்யலாம் கண்டிப் பாக உணவு உண்ணகூடாது வெறும் ( காலி வயிறாக ) வயிறாக இருக்கவேண்டும்


## பத்மாசனம்

பத்மாசனம் செய்யும் முன் தரையில் நேராக அமர்ந்து இரண்டு கால்களை நேராக முதலில் நீட்டிகொண்டு வலது காலைமடக்கி இடது தொடையின் மேலும், இடது காலைமடக்கி வலது தொடையின் மேல் வைத்து படத்தில் உள்ளவாறு வைத்துக் கொள்ள வேண்டும், எந்த கால்களை வேண்டு மானாலும் முதலில் மடக்கி வைக்கலாம்.


பத்மாசனத்தில் அமர்ந்த பின்பு உடல் நேராகவும் பார்வை நேராகவும் இருக்க வேண்டும் உடலை இருக்கி படித்தவாறு இருத்தல் கூடாது நேராக அமர்ந்து சுவாசம் ( மூச்சு) மெதுவாக விடவேண்டும். யோகாசனம் செய்யும் போது நம் உடலின் ஒவ்வொரு அசவைகளையும் நாம் உணரவேண்டும் அபோது தான் ஒவ்வொரு ஆசனம் செய்யும் போதும், நாம் உடலின் மாற்றங்களை அறிய முடியும்,கைகளை நீட்டியவாறு சின் முத்திரையில் கைகளை வைத்துகொள்ள வேண்டும், மனதை ஒருநிலை படுத்தி 5 முதல் 10 நிமிடம் வரை இருக்கலாம்

ஒவ்வொரு ஆசனம் முடித்ததும் கைகளை, கால்களை மெதுவாக விலகக்கவேண்டும் வேகமாக எடுக்ககூடாது ஒவ்வொரு ஆசனம் செய்யும் போது கால இடைவெளி இருத்தல் வேண்டும் கட்டாயம் மெதுவா செய்யவேண்டும் ஒவ்வொரு ஆசனம் செய்யும் போது உடல் வேர்வை நிலை வரும் அளவிற்கு கடினமாக கஷ்டப்பட்டு செய்தல் கூடாது செய்ய முடியாத நிலையில் 2 அல்லது 3 நிமிடம் ஓய்வெடுத்து பின் தொடரலாம்...

**பத்மாசனம் செய்வதால் நியாபசக்தி அதிக மாகும், முதுகுத்தண்டு வலுப்படும் மற்றும் தொப்பை குறையும்.**



# சஞ்சலம் வந்தாலும் வரட்டும் சற்றும் அலையாமல் சாந்தத்தில் கட்டு! ஒரு பொல்லாப்புமில்லை!!



## யோகர்சுவாமிகள்

சஞ்சலம் வராமல் இவ்வுலகில் வாழவும் முடியுமோ? இவ்வுலகிற் பிறப்பதையே பிணியாகச் சொல்லப்பட்டிருக்கிற பொழுது சஞ்சலத்தைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா?
சஞ்சலம் வந்துகொண்டேயிருக்கும்.

ஆனால், அதனால் பாதிக்கப் பாடா மலிருக்கவும் வழி காட்டப்பட்டிருக்கின்றது.

சற்குருவின் கடாட்சத்தாலும் மெய்யறிவைப் பெறுவதாலும் அவ்வழி எதுவெனவறிந்து, அதைக் கடைப்பிடித்தொழுகுவோமாகில், சஞ்சலம் நம்மை அலைக்கவும் முடியாது. அசைக்கவும் முடியாது.

இவ்வுலகதிலோ யாவும் அநித்தியம்.
இத்தேகம் அநித்தியம். பஞ்சபூதங்கள் அநித்தியம். ஐம்பொறி ஐம்புலன்கள் அநித்தியம். பெண்டிர்பிள்ளை அநித்தியம். பொருள்பண்டம் அநித்தியம் சீர்சிறப்பு அநித்தியம். பேர் புகழ் அநித்தியம். அதிகாரமும் செல்வாக்கும் அநித்தியம். எல்லாம் அநித்தியம்.
ஆகையால், இவைகளில் மயங்கிப் பற்று வைப்பது சஞ்சலத்துக்கிடமாகும். இவை நாமல்ல. இவை நமக்கந்நியமானவை. கருமம் புரிவதற்கு இவைகள் உபயோகப் படுவன.

அவைகளை அந்த உபயோகத்துக்கு தவக்கூடிய நிலையில் வைத்துப் பேண வேண்டியது முறை. ஆனால் அவை நமக்கென்றும் வேண்டியவையுமல்ல. நம்மை விட்டுப் பிரியாது என்றும் இருப்பவையுமல்ல.

ஆகையால், மனத்தை விடயங்களில் அதிகஞ் செல்லவிடுவதால் சஞ்சலத்தை வரவழைப்பதல்லாமல் வேறொரு பிரயோ சனமும் பெறமுடியாது.
யாக்கையே நிலையற்ற பொழுது யாக்கை சம்பந்தமாக அநுபவிக்கும் சுகங்கள் நிலைத்தாலென்ன, நிலையா விட்டாற்றானென்ன?

ஈற்றில் எல்லாம் அநித்தியமாகவே முடிகின்றது. ஆகையால் அநித்திய வஸ்துக்களில் பற்று வைப்பதில் ஒரு சுகமுமில்லை. கடைசியில் எல்லாம் சஞ்சலத்தையே வருவிக்கின்றன. ஒன்றும் பூரணவின்பத்தைக் கொடுப்பதாயில்லை. அவற்றின் சுகம் சிற்றின்பமாகவே முடிகின்றது. சிற்றின்பம் நிலையாத இன்பம். அதன் விளைவு துன்பம். அது நம்மைப் பந்தப்படுத்தும் இன்பம். உலக வாழ்வின் சஞ்சலங்களையெல்லம் கண்ட விவேகி அச் சஞ்சலங்களுக்குக் காரணமாயிருப்பனவற்றை ஒரு பொழுதும் நாடமாட்டான்.

**தொடர்ச்சி 25 ம் பக்கம்.**




டோட்மூண் நகரில் மாபெரும் ராஜ முத்திரை!

**S.K.Silks & Gold Paraadise**

பட்டுச் சேலைகளுக்கும்
தங்க நகைகளுக்கும்
நாடுங்கள்...

என்றும் புதியது
அழகின் இரகசியம் அது!

Mr.P.Sritharan
Proprietor

Adler str 33 - 44137 Dortmund

Tel:0231 9501 647

# நீ இன்று நானாக! நான் நாளை நீயா!!!

## மனிதனை மனிதனாக வாழவைக்கும் கர்மக் கொள்கை!




முதலில் ஒரு மனித உயிரின் பயணம் பற்றிக் காண்போம்! மனிதன் ஒழுக்க நெறியுடனும் வாழ்க்கையில் ஒரு குறிக் கோளுடனும் ஏனோ தானோ என்று வாழாமல் இருப்பதற்கே நம் ஹிந்து தர்மத்தில் பலப்பல தத்துவங்கள் உரைக்கப் பட்டுள்ளன என்றால் அது மிகையாகாது! அதில் முக்கியமானது கர்மா தத்துவம்!

மனிதன் தன் வாழ்நாளில் செய்யும் கர்ம வினைகளே அவனைத் தொடர்ந்து மறுபிறவியில் அனுபவிக்கும் வினை களுக்குக் காரணமாகும் என்பது கர்ம விதிகளில் ஒன்று! இதுவே மனிதனை தீவினைகளை செய்யாதிருக்கும் முகமாக வழிநடத்துகிறது என்றும் கொள்ளலாம்!! இதை அடிப்படையாகக் கொண்டே நாம் சில விஷயங்களுக்கும் நியாயம் கற்பிக்க முடியும்!

சிலர் நாத்திகர்கள் கூறுவார்கள் கடவுள் என்று ஒருவர் இருப்பது உண்மையானால் ஏன் இத்தனை ஏற்றத்தாழ்வுகளை மனிதனுக்கு வைத்து படைக்கிறார் என்று. இன்னமும் சிலர் கடவுளுக்கு மனமிருந்தால் பல குழந்தைகளை பிறவியிலேயே குருடாய், ஊமையாய், இன்னமும் கைகால் விளங்காமலே ஏன் படைக்க வேண்டும்? அவை என்ன பாவம் செய்தன என்றும் கேட்கலாம்.

இவற்றுக்கு சரியான விளக்கம் கர்மா கொள்கையில் உள்ளது! அந்த விளக்கம் மூன்று வகையான தன்மைகளுக்கு சரியான சமாதான விளக்கமாக விளங்குவது இன்னமும் சிறப்பு .

குழந்தை எந்தப் பாவமும் செய்யவில்லை! ஆனால் அது முற்பிறவியில் மனிதனாக இருக்கும் போது செய்த வினைகளின் அடிப்படையில்தான் இந்தப் பிறவியில் அதன் படைப்பு அமைகிறது.


அதனாலேயே முற்பிறவி வினைகளின் காரணமாகவே இப்பிறவியில் அதன் படைப்பு இப்படி அமைகிறது என்பது ஒரு சிறந்த முதல் விளக்கம். இதன் காரணமாகவே தான் மனிதனுடைய வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள் உண்டாகின்றன என்பது இந்தக் கொள்கையால் கிடைக்கும் இரண்டாவது விளக்கம்.

இன்னமும் பலர் இப்பிறவியிலே பலப் பல அக்கிரமங்களை செய்தாலுமே கூட அதற்கேற்ற கெடுபலன்கள் எதுவுமின்றி நன்றாகவே வாழ்கின்றனர் என்பது மனிதனுக்கு தர்மம், கடவுள் நம்பிக்கையை இழக்க வைக்கின்றன. ஆனால் இந்தக் கொள்கையின் மூலம் அவ்வாறு உள்ள மனிதன் அடுத்த பிறவியில் அதன் பலனைப் பெறுவான் என்று சொல்லப்படும் போது மனிதன் அதை நினைத்து சமாதானம் அடைகிறான்.

அது மட்டுமல்ல இப்பிறவியிலேயே யார் எந்த தீய செயல்களை செய்தாலும் கூட தான் அதனால் மனம்மாறாது நற்செயல்களை மட்டுமே புரிய வேண்டும் என்கிற ஒரு எண்ணமும் அவனுக்கு உண்டாகிறது.

இதுவே இந்தக் கொள்கையின் மூன்றாவது விளக்கம் என்றும் கொள்ளலாம். எது எப்படி இருந்தாலும் இந்தக் கொள்கையால் மட்டுமே மனிதன் உலகில் ஓரளவாவது நல்லவனாக இருக்கிறான் வாழ்கிறான் செயல்படுகிறான் என்பது திண்ணம்.

உபநிஷத்துகளின் விஞ்ஞான ரகசியங்கள்







# காவுதடியும் காவடியும்

சைவப்புரவலர் சமூகஜோதி நீர்வேலி நடராஜா சிவசுப்பிரமணியம் செட்டியார்.

இன்று நாம் காணும் ஒவ்வொரு காலச்சாரச் சின்னங்களுக்கும்,அதன் கலைவெளிப்பாடுகளுக்கும் ஒவ்வொரு காரணங்களை முன்னோர் கூறிச்சென்றுள்ளனர். அவை வாய்வழியாகவும்,ஏடுகள் நூல்கள்வாயிலாகவும் இன்றுவரை அதன் கருத்துக்கள் பயணித்தவண்ணம் உள்ளன.
இன்று உள்ள அறிவியல் விஞ்ஞான வளர்ச்சிக்கு முன்னால் அவை கேலிகுரியனவாகக் தோன்றி னாலும். அதனுள் பொதிந்துள்ள கருத்தை மட்டும் உற்று நோக்கினால் நமது இன்றைய அறிவு கேள்விக்குரியதாகத் தெரியும்.

கருத்தே கண்ணாயிருங்கள். இன்றும் இலங்கையில் இந்தக் காவுதடியினைக் காணலாம். குறிப்பாக சிங்களவர்கள் மேசை கதிரை விற்பதற்காக அன்று வடக்கு கிழக்கிற்கு வரும்போது இந்தக்காவு தடியில் கதிரை மேசைக் கட்டி தோளில் சுமந்து வருவதை நீங்கள் முன்பு அவதானித்து இருப்பீர்கள். அது போல் தமிழர்கள் மண்பானை சட்டி வியாபாரிகள் இப்படி காவுதடியில் இருபக்கமும் உறிபோல்கட்டி காவுவுதைக்கண்டிருப்பீர்கள்.

இந்தப்பின்னணியை வைத்துக்கொண்டு இனி வாசியுங்கள்.
முன்னொரு காலத்தில், அகத்திய முனிவர் தம் தவத்திற்காக,தான் இருக்கும் இடத்திற்கு, சிவகிரிமலையையும், சக்திகிரிமலையையும் கொண்டுவர ஆசைப்பட்டார். அகத்தியர் தன் தவவலிமையினால், மலைகளை கொண்டுவரமுடியும், ஆனால் ஒருவரை தேடுகையில், இடும்பன் ஞாபகம் வர, இடும்பனை அழைத்து தன் விருப்பை கூற, இடும்பன் அவா் விருப்பை ஏற்று மலை இருக்கும் இடத்திற்கு சென்றான். ஒரு தடியை எடுத்து, இருமலைகளையும் உறிபோல் இருபக்கமும் கட்டி தொங்கவிட்டு காவிவந்தான். இதனை கண்ட முருகன் அரசன் போல் குதிரையில் வந்து இடும்பனை நோக்கி "அப்பனே நீ மிகவும் களைத்துவிட்டாய் போலும், இதனை சற்று இறக்கி வைத்துவிட்டு களைப்பாறிவிட்டு எடுத்துச்செல்" என்றார். இடும்பனும் அப்படியே செய்தான். களை மாற மீண்டும் தூக்கி செல்ல முயன்றான், முடியவில்லை. மீண்டும் மீண்டும் பலமுறை முயன்றும் முடியவில்லை. முருகன் சிரித்தபடி அவன் முன் தோன்றி இந்தமலை எனக்கு வேண்டும், இங்கு நான் இருக்கின்றேன், பக்தர்கள்,அடியார்கள் யாவரும், உன்போல் பால்,தயிர், புஸ்பம், என பூசைக்குரியவற்றை கொண்டு வந்துதந்து அருள் பெற்றுசெல்வார்கள் என திருவாய்மலர்ந்து அருளி மறைந்தார். இதன்பின் பலரும் பால்,பழம்,பன்னீர்,புஸ்பம் என தோளில் காவிவந்து, அபிசேக பூசைக்கு உதவிநின்று, பாடித்துதித்து, பணிசெய்து, அருள் பெற்றார்கள்.
இந்த காவுதடியானது காவடியாக தோற்றம் பெற்றது என பல முன்னோர்கள் அறியதந்திருக்கின்றார்கள். மயில் ஆடும் போது வட்டமாக இருக்கும் அதனால் தடியின்மேல் வட்டமாக செய்து, மயிலின் இறகை பக்கங்களில் கட்டி, பால்செம்பை இந்த காவுதடியில் கண்டிப்பாக கட்டிவிட்டு, மேல் நடுவே பூக்கொத்தும் வைத்தார்கள். பின்னர் பால்காவடி, பன்னீா்காவடி, புட்பக்காவடி, பறவைக்காவடி, செதில்காவடி என தத்தம் ஆசையுடன், நேர்த்திக்கு செய்து கொண்டார்கள்.

22ம் பக்கத் தொடர்ச்சி

# சஞ்சலம் வந்தாலும் ....

நித்தியா நித்திய விவேகம் ஒன்றுமே மனிதனைச் சஞ்சலத்திலிருந்து மீட்கக் கூடும். நித்தியானந்த நித்திய வஸ்துவாகிய இறை எம்முடன் என்றும் உள்ளது. அது நம்மை விட்டு ஒரு காலத்திலும் பிரியாதது. அதை உணர்வதே வீடு. அதைப் புசிப்பதே பேரின்பம். அதில் சொக்குவதே இறவா இன்பம். அது குணங்குறியற்றது.

அது ஒரு மாதிரியிலுமில்லை. அது ஆச்சிரமங் களில் தங்கியிருக்கவில்லை. சாதி, சமயம், தொழில் முதலிவை ளாலு ண்டாகும் பேதங்களில் அது தங்கியிருக்க வில்லை. எல்லோருக்குஞ் சமபாகமா யுள்ளது.

எவரொருவருக்குஞ் சொந்தமானதன்று. எல்லா வற்றையும் மறந்து அதன் நினைவு ஒன்றேயிருந் தால் போதும். ஒரு துகாமும், ஒரு சஞ்சலமும் நம்மைப் பாதிக்கமுடியாது.

கடவுள் ஒருவரே நித்திய வஸ்து. நாம் வேறு, கடவுள் வேறு எனுமெண்ணம் நமக்கொரு காலத்திலும் இருக்கப்படாது. நம்முடையதென்று ஒன்றையும் வைத்த ிருக்கப்படாது. நமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அவரிடத்தே ஒப்படைத்துப் போட வேண்டும். நான் என்ற நினைவே யிருக்கப்பாடாது.

எல்லாம் அவருடையதாய் விட்டு விட வேண்டியது. தனம், தானியம், பூமி முதலிய சகல சம்பத்தும் அவரால் நமக்களிக்கப் பட்டன. எல்லாம் அவருடையது. நமக் கென்று எதுவிருக்கின்றது?
நம்முடன் கூட வந்ததெது? நம்முடன் கூடப்போவதெது? ஒன்றுமேயில்லை.
எல்லாம் வந்தவாறு ஏதோ மாயமாய்ப் போய் விடும். ஆகையால் நிலையற்ற பொருட் களில் மனத்தைச் செல்லவிடுவது சஞ்சலத்துக்கிடமாகும்.
அவற்றில் பற்று வைப்பது தவறு. ஏதுமொரு காலத்தில் அவைகள் நம்மை விட்டுப்பிரிய வேண்டி வரும்.

அப்பொழுது சஞ்சலத்துக்கிடமாகும். பரம் ஒன்றே எக்காலத்தும் நம்மைவிட்டுப் பிரியாமலிருக்கின்றது. அது நித்தியமான பொருள். பண்டும், இன்றும், என்றும் அது நம் உயிருக்குயிராய் நம்மறிவினுக்கறிவாய், நம்மை விட்டுப் பிரியாதிருக்கின்றது.
வாழ்விலும் தாழ்விலும் இன்பிலும், துன்பி லும், இறப்பிலும், பிறப்பிலும் நம்முடன் எக்காலத்துங் கூடவேயிருக் கின்றது. நமக்கு என்றும் வழிகாட்டுவதும் அதுவே. அதன் சந்நிதானத்தை விட்டு ஒரு காலமும் விலகமுடியாது. அஃது அப்படியேயுள்ள காரியம். எப்பவோ முடிந்த காரியம்.

எல்லாம் சிவன் செயல். உலகமெல்லாம் இறைவன் சந்நிதானம் - இறைவனுடைய சந்நி தானத்தில் ஒரு பிழையுமுண்டாகாது. எங்களுக்கு அது வேண்டும் இது வேண்டும் என ஆசைப்பட வேண்டியதில்லை. எதைக் கடவுள் நமக்குக் கொடுக்கிறாரோ அதை நாம் சந்தோஷமாக ஏற்க வேண்டியது. கடவுளுடைய ஆசீர்வாதம் நமக்கெப்பொழுதும் உண்டு. அதைப்பற்றி நமக்குச் சற்றேனும் ஐயமிருக் கப்படாது.

சில காரியங்கள் நமக்கு விளங்காமலிருக் கலாம். அதையிட்டு நாமேன் கவலைப்பட வேண்டும்? எல்லாம் கடவுளுடைய சித்தத்தின்ப்டி நடந்துகொண்டு போகின்றன.

நாமுன்றுமறியோம். எல்லாம் அவர் அறிவார். எமது கடன் பணி செய்து கிடப்பதே. இறைவன் சந்நிதானத்தில்நாம் என்றுமிருப்பதால் நமக்கொரு குறையுமில்லை. நமது செயல் ஒன்றுமில்லை. எல்லாம் ஈசன் செயல் எனும் உணர்ச்சி நாளாந்தம் வளர்ந்துகொண்டு போக “ஒரு பொல்லாப்பும் இல்லை“ எனும் மகா வாக்கியத் தின் உண்மையை நாம் உணரக்கூடியதாய் வரும். திடபக்தி வேண்டும். கடவுளிலே பூரண விசுவாசமிருக்க வேண்டும். அதவிடச் சிறந்த கவசம் வேறொன்றுமில்லை. என்ன வந்தாலும் அசையாமலிருக்கப் பழகவேண்டு.

”சஞ்சலம் வந்தாலும் வரட்டும் - வேல் வேல்

சற்றும் அலையாமல் சாந்தத்தில் கட்டு - ஒரு பொல்லாப்புமில்லை”

(இக்கட்டுரை சிவயோக சுவாமிகளின் ஆணைக்கு அமைய “சிவதொண்டன்“ இதழில் வெளிவந்தது)



# ஏன் கோயிலுக்குச் செல்லவேண்டும்?
## வீட்டில் கும்பிடமுடியாதா ?

**ஆலய வழிபாடு**

" கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்
"" ஆலயம் தொழுவது சாலவும் நன்று "

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த, கலைவாணிக்கு நிகரானவர் எனப் போற்றப் படும் மூதாட்டி ஒளவையார் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஆலயம் என்பது ஆன்மா இறைவனில் லயிக்கின்ற இடம். ஆன்மாவின் ஆணவ மலம் அடங்குவதற்குரிய இடம் எனவும் கூறலாம்.

கோயில் என்பதன் பொருள் (கோ அரசன், இல் வீடு) அரசனுடைய வீடு என்பதாகும். தெய்வங்களுக்கு அரசனாக விளங்கும் சிவபெருமானின் ஆலயமே திருக்கோயில். நாளடைவில் பிள்ளையார், முருகன், அம்பிகை என மற்றத் தெய்வங்களின் அமைவிடமும் கோயில் என அழைக்கப்படலாயிற்று.

**நாம் ஏன் கோயிலுக்குச் செல்லவேண்டும்? வீட்டில் கும்பிடமுடியாதா ?**

நாம் முற்பிறவிகளில்ச் செய்த வினையின் ஒருபகுதியை அனுபவிப்பதற்கே இறைவன் திருவருளால் இப்பிறவியை எடுத்துள்ளோம். இவ்வினையை இலகுவாகக் கடந்து செல்வ தற்கு நாம் இறைவனை நாடவேண்டும். ஆற்றைக் கடக்க ஓடத்தைப் பாவிப்பது போலவும், தண்ணீர்க் குடத்தைத் தலையில்ச் சுமக்கும் போது தலைக்கும் குடத்திற்கும் இடையில் சும்மாடு (துணியால் வட்டமாகச் சுற்றப்பட்ட திருகணி) வைத்துப் பாரத்தைச் சுலபமாக்குவது போலவும் இறைவன் அருளி னால் எமது வினைகளை நாம் இலகுவாகக் கடந்து செல்லலாம். அது மட்டுமல்ல இப்பிறவியில் மேலும் தீய வினைகளைச் செய்யாமல் நல் வினைகளைச் செய்வதற்கு எம்மை நாமே பக்குவப்படுத்துவதற்கு இறை அருளை வேண்டுவதற்கும் நாம் இறைவனை நாடவேண்டும். சுருக்கமாக நாம் இறைவனை நாடுவது எமது தேவைகளை வரமாகக் கேட்டுப்பெறுவதற்கும், எமக்கு ஏற்படும் பயத்தை களைய இறைவனிடம் வேண்டு வதற்குமாகும்.

வீட்டில் பூஜை அறை அமைத்து நாம் செய்யும் பூஜை ஆத்மார்த்தப் பூஜை ஆகும் ஆலயத்தில் பொதுவாக (எங்களுக்காக) சிவாச்சாரியார் செய்யும் பூஜை பரார்த்த பூஜை (பர மற்றவர், அர்த்த பொருட்டு) ஆகும். மூங்கில்க் காட்டில் உள்ள மூங்கில் முழுவதிலும் தீயை உருவாக்கும் தன்மை இருப்பினும் உராயும் இடத்தில் மட்டும் தீ உருவாகுவதைப்போல இறைவன் எங்கும் நிறைந்திருப்பவராயினும் இறை அருள் வெளிப்படும் இடம் ஆலயம் ஆகும்.

தொடர்ச்சி 29 ம் பக்கம்


**T.T.S.Brothers GmbH&Co.KG**



**உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்**
**ஆடை அணிகலன்கள் மற்றும்**
**உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து**
**தேவைகளுக்கும்**
**நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.**

| | | | |
|---|---|---|---|
| RHEINISCHE STR 52<br>44137 DORTMUND<br>Tel:0231 819288 | Helmholtz Str.11<br>46045 Oberhausen<br>Tel:0208 202829 | Garten Str.29<br>48147 Münster<br>Tel: 0251 2301184 | Johannes Str.35<br>53225 Bonn Beuel<br>Tel. 0228 40377846 |

# ஆணவம்

கன்மம், மாயை
(அடுத்த இதழில்....)

## கருணாநிதி நாகேந்திரம்

**ஆணவ மலம்**

உயிர்களுக்கு அறியாமையைச் செய்யும், யராலும் படைக்கப்படாத ஒரு பொருள் ஆணவ மலம் எனச் சைவசித்தாந்தம் கூறுகிறது. இவ் வுண்மையை

இருபா இருபஹுது பாடல் எண் 4 (25) இல்

**"..........எம்மைவந்து அணையத்
தானோ மாட்டாது யானோ செய்கிலன்
நீயோ செய்யாய் நின்மலன் ஆயிட்டு"**

எனக் கூறுகிறது.

உண்மை விளக்கம் பாடல் எண் 22 இல்

**ஆறாறு தத்துவமும் சொன்னோம் அடைவாக
மாறா மலமிரண்டும் வாசொல்லக் – கூறில்
அறியாமை ஆணவம்நீ யானசுக துக்கம்
குறியா வினையென்று கொள்."**

இதுவரை முப்பத்தாறு தத்துவங்களை முறை யாகச் சொன்னோம். இனி நீங்காமல் இருக் கின்ற ஆணவ மலத்தையும், கன்ம மலத்தை யும் சொல்கிறோம் கேள்.

குறிப்பிட்டுச் சொன்னால் ஆணவ மலம் அறியாமையை உண்டாக்கி நிற்பதாகும். கன்ம மலம் இன்ப துன்பங்களை எதிர்பாராத வகையில் தந்து நிற்பதாகும்.

ஆணவ மலம் அனாதியே. ஆன்மா பிறப்பிற்கு உட்படாத கேவல நிலையிலும், பிறப்பிற்கு உட்பட்டு பல பிறவிகள் எடுக்கும் சகல நிலை யிலும் உயிரின் அறிவை மறைக்கிறது. ஆணவ மலம் தன் ஆற்றலால் ஆன்மாவை நிலை இல்லாப் பொருளை நிலையான பொருள் என்றும், துன்பம் தரும் பொருளை இன்பம் தரும் பொருள் என்றும், தகுதி இல்லாத தன்னைத் தகுதி உடையவன் என்றும், உலக போகங்களை நுகரும் போது தனது சொந்த முயற்சியால் இவற்றைப் பெற்றேன் என்றும், எனக்கு மேல் எவரும் இல்லை எனவும், நானே இவற்றை அனுபவிக்கப் பிறந்தேன் எனவும் செயல்பட வைப்பதுடன், நான், எனது என்ற அகங்காரங்களை உண்டாக்குகிறது.

ஆணவ மலத்திற்கு எட்டுக் குணங்கள் உள்ளன.
அவையாவன 1.விகற்பம் (தன்னைவிடப் பிறர் ஒவ்வாரெனல்) 2.கற்பம் (பிடித்ததைப் பிடித்திருத்தல்) 3.குரோதம் (கோபம் கொண்டு நினைத்தல்) 4.மோகம் (ஒன்றுக்கு ஆசைப்படுதல்) 5.கொலை (உயிர்களைக் கொல்லுதல்) 6.அஞர் (சந்தமும் துக்கப்படுதல்) 7.மதம் (அகங்காரம் மேலிடுதல்) 8.நகை (சிரித்தல்).

இக்குணங்களால் பல இச்சைகள் உண்டாகும். இச்சைகளால் வினைகள் நிகழும். ஆணவம் கன்மத்திற்கு வித்து என்பர்.

ஆணவம் தன்னையும் காட்டாமல், தான் மறைத்த ஆன்மாவையும் காட்டாமல் நிற்பதை திருவருட் பயன் பாடல் எண் 23 இல்

**"ஒருபொருளும் காட்டா திருளுருவங் காட்டும்
இருபொருளுங் காட்டா திது."**

இருட்டானது மற்றைய பொருளைக் காட்டாது ஆயினும் இருளாகிய தன்னுருவத்தைக் காட்டும். ஆணவ மலமானது பிற பொருளையும் காட்டாது. தன்னையும் மறைத்துக் கொண்டு நிற்கும்.

திருவருட் பயன் பாடல் எண் 24 இல்

**"அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடையடங்கி
இன்றளவும் நின்ற திருள்."**

அநாதி காலந்தொட்டு உயிரோடு உள்ளதாய் அவ்வுயிரோடு கலந்திருக்கின்ற சிவம் நிற்க அந்தச் சிவத்தைச் சாராது உயிரை மட்டும் சார்ந்து ஆணவ மலமானது இன்றுவரை நீங்காது நிற்கிறது.

தொடர்ச்சி 29ம் பக்கம்....











யேர்மனி – பிலபெல்ட் –அருள்மிகு கல்யாண முருகன் கோவில் தேர்.09.08.2015





யேர்மனி – கம் சித்திவிநாயகர் ஆலயத் தேர்.02.08.2015

அனைவரும் வருகைதந்து சங்கரை
வாழ்த்துமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.




01.Nov.2015

# மிருதங்க அரங்கேற்றம்

## சங்கர் ஜெயந்திநாதக்குருக்கள்

சங்கீதரட்ணம் ச.பிரணவனாதன் அவர்களின் முதன்மை மாணவன் மிருதங்க கலாஜோதி,லய ஞானவாருதிஅனுஷாந்த் நயினை விஜயன் அவர்களின் மாணவன் செல்வன் சங்கர் ஜெயந்திநாதக்குருக்கள் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் நவம்பர் மாதம் 1ம் திகதி சுவெற்றா நகரில் நடைபெறவுள்ளது.

27ம் பக்கத் தொடர்ச்சி...

## ஆணவம்.

திருவருட் பயன் பாடல் எண் 25 இல்

**"பலரைப் புணர்ந்துமிருட் பாவைக்குண் டென்றுங்
கணவர்க்குத் தோன்றாத கற்பு."**

எண்ணில்லாத ஆன்மாக்களைப் பொருந்திக் கலந்து நிற்கும் ஆணவமாகிய பெண்ணிற்குத் தனது நாயகனாகிய ஆன்மாவிற்கு எக்காலத்தும் தன்னைக் காட்டாது நிற்கின்ற முறைமையாகிய கற்பு உண்டு.

திருவருட் பயன் பாடல் எண் 26 இல்

**"பன்மொழிக ளென்றுணரும் பான்மை தெரியாத
தன்மைஇரு ளார்தந் தது."**

பல சொற்கள் சொல்லுவதனால் என்ன பயன் ? உயிரானது பொருள்களின் உண்மை நிலையை அறிய முடியாமல் நிற்கும் மயக்கத்தை ஆணவம் தந்தது எனலாம்.

திருவருட் பயன் பாடல் எண் 27 இல்

**"இருளின்றேற் துன்பென் உயிரியல்பேல் போக்கும்
பொருளுண்டேல் ஒன்றாகப் போம்."**

ஆணவம் என்ற ஒன்று இல்லை என்றால் உயிருக்குப் பிறவித் துன்பம் இல்லை. எனவே இந்த ஆணவம் உயிரின் குணமாக இருக்குமானால் ஆணவத்தைக் கெடுக்கத் தக்கப் பொருள் உண்டா? என்றால் அதன் வலியைக் கெடுக்கக் கூடிய சிவனருள் உண்டு. ஆதலால் ஆணவம் உயிரின் இயல்பு அன்று. தனித்த பொருளே ஆகும்.

கொடிக்கவி பாடல் எண் 1 இல்

**"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றேஇடம்
ஒன்றுமேலிடில் ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள்அடராது
உள்உயிருக்குயிராய்த்
தெளிக்கும் அறிவுதிகழ்ந்து உளதேனும்
திரிமலத்தே
குளிக்கும் உயிர்அருள் கூடும்படி
கொடிகட்டினனே."**

ஞானமாகிய பேரொளிக்கும், ஆணவமாகிய இருளுக்கும் இடம்கொடுத்து நிற்பது உயிர் ஒன்றாகும். உயிரில் இறைவனுடைய அருளாம் பதிஞானம் மேலிட்டு நின்றால் இருளாகிய ஆணவம் ஒடுங்கி நிற்கும். ஆணவம் மேலிட்டு நின்றால் ஞானம் ஒளிந்து நிற்கும். என்றாலும் ஆணவம் ஞான ஒளியை வென்று திகழ முடியாது. உயிரானது இறைவனுடைய அருளால் ஆணவம் விலகிச் சிறிது அறிவு பெற்றாலும் ஆணவ மலத்தின் சார்பினால் மும்மலத்தில் மூழ்கித்தான் கிடக்கும். எனவே, உயிர்களை மும்மலத்தில் இருந்து விடுவித்து இறையருள் கூடிடக் கொடி உயர்த்தினேன்..

(அடுத்த இதழில்... கன்மம் மாயை)

**26ம் பக்கத் தொடர்ச்சி**

### ஏன் கோயிலுக்குச் செல்லவேண்டும்?

ஆகம முறைப்படி அமையும் ஆலய அமைப்பும், ஆலயம் அமைக்கும் போது அங்கு பிரதிஸ்டை செய்யப்படும் விக்கிரகங்களும், அவற்றின் கீழ் வைக்கப்படும் இயந்திரமும், அப்பொழுது செய்யப்படும் கிரியைகளும் (கும்பாபிஷேகம்) எங்கும் பரந்துள்ள இறைசக்தியை அங்கு குவியச் செய்கின்றன. அதுமட்டுமல்ல ஆலயத்தில்த் தினமும் நடக்கும் மந்திர உச்சாடனத்தாலும், அபிசேக ஆராதனைகளாலும், அருச்சனை முதலிய கிரியைகளாலும், திருமுறைப் பாடல்களாலும், மகோற்சவம், விசேடகால உற்சவங்களாலும் அன்னதானம் போன்ற நற்காரியங்கள் நடப்பதாலும் இறைஅருள் தொடர்ந்து சுரக்கும் இடமாக ஆலயம் திகழ்கின்றது. ஆலயங்கள் இறைவழிபாடு மட்டுமின்றி எமது மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கும் இடமாகவும் மிளிர்கின்றன. ஆலயத்திலுள்ள விக்கிரகங்கள் எப்பொழுதும் எமது தேவையைப் பூர்த்தி செய்யத் தயாராக இருப்பதைக் குறிக்க வரதகரத்துடனும், பயத்தை நீக்க அபயகரத்துடனும் தரிசனம் தருகின்றன.

ஆலயத்தில் ஒலிக்கின்ற மந்திர ஒலிகளும், திருமுறைப்பாடல்களும், மணிஓசை, நாதஸ்வரம், மேளம் முதலிய மங்கல வாத்தியங்களின் ஒலிகளும், சாம்பிராணி வாசனை என்பனவும் எமக்குப் பக்தி உணர்வினை எழுப்புகின்றன. இச்சூழ்நிலை எமது ஐம்புலன்களை அடக்கி மனதை ஒருநிலைப்படுத்தி இறைவழிபாட்டிற்கு உகந்ததாக உள்ளது. முறையான ஆலய தரிசனம் , தொழுகை தெளிவான ஞானத்தை நிச்சயம் ஊட்டும்.

யேர்மனியில் புகழ்பெற்ற **மொத்த விற்பனை நிலையம்**

# StaR-Impex

StaR-Impex

அபிஷேகப் பொருட்களுக்கு இன்றே நாடுங்கள்




ஆலயத்திற்கும், இல்லத்தின் மங்கலகரமன வைபவங்களுக்குமான பூஜைப் பொருட்கள். மற்றும்திருவிழாக்களுக்கு வேண்டிய அபிஷேகப் பொருட்களுக்கும் என்றும் நாடுங்கள்.

**Tel.: 0231/8602696 Mobil: 0172/2183703**

Fax: 0231/8602698 E-Mail: star-impex@live.de

Kipperstr. Tor 3
44147 Dortmund

# சுவாமி விவேகானந்தர் பொன் மொழிகள்



எனது துணிவுடைய இளஞர்காள் நீங்கள் அனைவரும், பெருங் காரியங்களைச் செய்ய பிறந்தவர்கள், என்ற நம்பிக்கை கொள் ளுங்கள். குட்டி நாய்களின் குரைத்தலைக் கண்டு அஞ்சாதீர்கள்!

உமது நாடு வீரர்களை வேண்டி நிங்கின்றது. வீரராகுக. ஒரு கற்பாறையைப்போல் உறுதி யாக நிற்பீராக. மெய் எப்பொழுதும் வெல் கிறது.

நண்ப, அழுவதேன்? உமக்குள் எல்லாச் சக்தியும் உள்ளது. பலவானே உனது எல்லாம் வல்ல இயல்பை வரவழை. மூவுலகமும் உன் காலடியில் அமரும். வெல்வது ஆன்மா ஒன்றே. சடமன்று.

பலமே வாழ்வு, பலமின்மையே மரணம். பலமே இன்பமும் நிலையான அழிவற்ற வாழ்வுமாம்.

நமது பலமின்மையே நம்மிடம் பொய்யும், களவும், கொலையும், வேறு பல பாவச்செயல்களும் இருப்பதற்கு காரணமாம்.

நமக்கு வேண்டிய ஒரே பொருள் பலமே. உலகத்தின் நோய்க்கு மருந்தும் பலமே.

எழுந்து நில்லுங்கள். பலமுடையவராகுங்கள், தைரியமாயிருங்கள். வாழ்க்கையை உங்கள் பிரியப்படி அமைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா விலங்குகளிலும், எல்லாத் தேவ தூதர்களிலும் பார்க்க மனிதனே உயர்ந்தவன்.

நாம் போதிய நெடுங்காலம் அழுதாயிற்று. இனியும் அழ வேண்டாம். எழுந்து நின்று ஆண்மையுடன் போராடுங்கள்.

நாம் பல பொருள்களைப்பற்றிக் கிளியைப் போல் பேசுகின்றோம். ஆனால் செயலள விலில்லை. இதன் காரணம் யாது? உடற் பலவீனம். இவ்விதப் பலமற்ற மூளையால் ஒன்றையும் செய்யவியலாது.

நீதியாயிரு, தைரியமாயிரு, முழுமனதும் ஊன்றியவனாயிரு, பிறலாத ஒழுக்க முடையவனாயிரு!

அறிவுக்குத் தொந்தரவு கொடாதெ, கோழை களே பாவம் புரிவர். தைரியசாலிகள், பாவம் புரியார், ஒவ்வொருவரையும் நேசிக்க முயல்க.

வஞ்சனையால் பெரும்பணி எதனையும் ஆற்ற முடியாது அன்பாலும், சத்தியத்தாலும், பெரும் சக்தியாலுமே பெருங்காரியங்கள் நிறைவேறு கின்றன.

ஆ! நீங்கள் உங்களது இயல்பை மட்டும் உணர்வீரேல் நீங்கள் ஆத்மாக்களே, தெய்வ ங்களே!


நான் மெய்யைப் பின்பற்றி நிற்பவன், மெய் ஒருக்காலும் பொய்யோடு ஒன்று சேராது, சத்தியமே வெல்லும்!

பழிவாங்குதலைப்பற்றி ஒருக்காலும் நான் யோசிப்பதில்லை, பேசியதுமில்லை. எப் பொழுதும் பலத்தைப்பற்றியே பேசி யுள்ளேன்.

எழுந்திருங்கள், உழையுங்கள், இவ்வாழ்வு எத்தனை நாள்? இவ்வுலகில் தோன்றிய நீங்கள் ஏதாகிலும் விட்டுச் செல்லுங்கள். அப்படிச் செய்யாவிடில் மிருகங்களுக்கும், உங்களுக்கும் என்ன வித்தியாசம்?

கடலைப்பார். அலையைப்பாராதே.
எறும்பிற்கும் தேவ தூதனுக்கும், எவ்வித வேற்றுமையையும் பாராதே. ஒவ்வொரு புழுவும் இயேசுவின் சகோதரனாகும்.

சிவ பெருமானுக்குப் பணி செய்ய விரும்புவோன், அப்பெருமானின் மக்கட்குப் பணி செய்ய வேண்டும்!


தேரும் வேரும் பூவும்

